விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 06 | ஞாயிற்றுக்கிழமை | (21.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 338

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# மீசாலையில் நேற்று பெரும் களேபரம்

# படையினர் சூடு; மக்கள் கல்வீச்சு!



## குடாநாடெங்கும் பெரும் பதற்றம்: இயல்புநிலை முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

**வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொடூர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் எதிரொலி நேற்று மீசாலையில் பெரும் களேபரமாக வெடித்தது.**

**வல்வைச் சம்பவத்தைக் கண்டித்து மக்கள் வீதியில் இறங்கி நேற்று முழுநாளும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் குடாநாடெங்கும் பெரும் பதற்றம் நிலவியதுடன், மீசாலையில் பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல்நிலை உருவாகி பெரும் களேபரம் வெடித்தது.**

வல்வெட்டித்துறையில் அப்பாவி இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று யாழ். குடாநாடு தழுவிய வகையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைக் கண்டிக்கும் வகையிலும் எதிரப்புத் தெரிவிக்கும் வகையிலும் யாழ். குடாநாடெங்கும் மக்கள் வீதிகள், சந்திகள் எங்கும் ரயர்களைப் போட்டு எரித்தும், போக்குவரத்தை முடக்கியும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கையினால் குடாநாடு எங்கும் பெரும் பதற்றநிலை காணப்பட்டதுடன், இயல்புநிலை முற்றாக ஸ்தம்பித்திருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## “தமிழரைக் கொல்லாதே” கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடமராட்சியில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், தென்மராட்சியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை குறித்தும், பாராளுமன்றத்தில் நேற்று நண்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தனர்.

ஆனால், இதற்கு ஆளும்கட்சித் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் மேசைக்கு முன்பாக குழுமிநின்று ‘தமிழர்களைக் கொல்லாதே, தமிழர்களைக் கொல்லாதே’ என்றுகூறி ஆர்ப்பாட்டம் செய்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அமைதியை ஏற்படுத்த படையினர் - புலிகள் அவசர சந்திப்பு

### கொலையாளிகளை நீதியின் முன்நிறுத்துமாறு புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கும், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கும் இடையே நேற்றுமாலை அவசர சந்திப்பொன்று நடைபெற்றது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தினால் நேற்று யாழ். குடாநாடு முழுவதும் பெரும் பதற்றநிலை உருவானதுடன், வீதிப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டு இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

மேலும் பொதுமக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே ஆங்காங்கே மோதல்களும் ஏற்பட்டன.

இந்நிலையில் குடாநாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்தவேண்டியதின் அவசியங்கருதி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொலை - பாலியல் வல்லுறவு - போதைவஸ்து

# இலங்கையில் மீண்டும் மரணதண்டனை அமுல்!

### ஜனாதிபதி சந்திரிகா நேற்று உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் முப்பது வருடங்களுக்குப் பிறகு மீண்டும் நேற்றுமுதல் மரணதண்டனை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொலை, பாலியல் வல்லுறவு மற்றும் போதைவஸ்து விற்பனை போன்ற குற்றங்களுக்கு இனிமேல் மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பாதுகாப்புத் தொடர்பான உயர் மட்ட மாநாடு நேற்று இடம்பெற்றது. இம் மாநாட்டிலேயே மேற்படி மரணதண்டனை உத்தரவை ஜனாதிபதி நீதித்துறைக்குப் பிறப்பித்துள்ளார்.

இம்மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்த மாநாட்டில் ஜனாதிபதியினால் பின்வரும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன.

குற்றப் புலனாய்வுத்துறை உடனடியாக மீளாய்வு செய்யப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

குற்றவியல் சட்டத்தில் மேலதிக திருத்தங்கள் செய்யப்படவேண்டும். இதற்கான அறிக்கையை நாலுவார காலத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரியின் நோக்கங்களுக்கு எடுபடாமல் அமைதியைப் பேணுமாறு வேண்டுகோள்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரத்தை திட்டமிட்டு சீர்குலைக்கும் எதிரியின் நோக்கங்களுக்கு எடுபடாமல் மக்களை அமைதியைப் பேணுமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று மாலை யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி இந்த வேண்டுகோளை விடுத்தார். இது விடயம் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் அப்பாவி இளைஞர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக எதிர்ப்பு நட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் காயமடைந்தவர் ஈ.பி.டி.பி. உறுப்பினராம்!

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்று தெரியவருகிறது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்ற பிரஸ்தாப

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு?

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயார் என்று அரசு அறிவித்தும் விடுதலைப் புலிகள் அதற்கு முன்



வராமல் இருப்பதும் கவலையளிக்கிறது.

இருந்தும் நாட்டினதும் மக்களினதும் நலன்கருதி மீண்டும் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

அவர் அச் செவ்வியில் மேலும் குறிப்பிடுகையில்,

நாங்கள் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசவும் தயார் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துகொள்கின்றோம்.

இடைக்கால நிர்வாகம் குறித்த புலிகளின் பிரேரணைகள் குறித்தும் நாங்கள் பேசத் தயாராகவுள்ளோம்.

எத்தகைய பிரச்சினைகளாக இருந்தாலும் முதலில் சமாதான பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள் அது பற்றிப் பேசலாம் என்றுதான் நாங்கள் விடுதலைப் புலிகளை அழைக்கின்றோம் என்றார்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளின் பிரேரணைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற நிபந்தனைகள் அடிப்படையில் மட்டும் பேசுவதற்காக ஜனாதிபதி தயாராகவில்லை என கூட்டுக்கட்சியான ஜே.வி.பி தெரிவிக்கின்றது.

ஏனெனில் விடுதலைப் புலிகளின் பிரேரணைகளில் மூன்று பிழைகள் இருக்கின்றன.

அவை இலங்கை என்ற இந்த நாட்டினுடைய பேராண்மைக்கு பாதிப்பை கொண்டுவரக்கூடியவை என்றும் இடைக்கால நிர்வாகம் குறித்த பிரேரணை அவ்வாறு இருக்கமுடியாது எனவும் ஜே.வி.பி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

(க-4)

# அரசின் உறுதிமொழிகள் அனைத்தும் பட்ஜெட்டில் உள்ளடக்கப்படவில்லை

## ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த மூன்று மாதத்துக்குள் துரித நிவாரணங்களை வழங்குவதாகக்கூறிய ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் அவற்றை வரவு-செலவுத் திட்டத்தில் நிறைவேற்றவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளுக்குச் சமனான உறுதிமொழிகள் பல இவ்வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சிக்கு வந்த மூன்று மாதத்துக்குள் அரச ஊழியர்களின் சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரிப்பதாக ஜனாதிபதி உட்பட கூட்டமைப்பினர் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தெரிவித்தனர்.

இம்முறை, வரவு செலவுத் திட்டத்தில் மிகக் குறைந்தளவிலான சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென்று கூடிய நேர சேவையை அரச ஊழியர்கள் வழங்க வேண்டியேற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று சமுர்த்தி உதவி பெறும் சகலருக்கும் அதனை துரிதமாக வழங்குவதாகக்கூறிய உறுதிமொழிகளும் மீறப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-4)

# யாழ். மாவட்ட முஸ்லிம்கள் இன்றைய சூழலில் சுய அரசியலில் அமைதிகாப்பது அவசியம்

## முஸ்லிம் வாலிபர் சங்கத் தலைவர் எம்.எஸ். றஹீம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முஸ்லிம்கள் தமது எதிர்காலம் குறித்து விரிவாக ஆராய்ந்து முடிவெடுப்பதும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதோடு சுய அரசியலில் அமைதிகாப்பதும் மிகமிக அவசியமாகுமென முஸ்லிம் வாலிபர் சங்கத் தலைவர் எம்.எஸ்.றஹீம வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையில்,

யாழ். மாவட்ட முஸ்லிம்கள் கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்களின் கட்சிகளுக்கே ஆதவளித்தனர். இதனால் தமிழ் அரசியல்வாதிகளும் முஸ்லிம்களின் விடயத்தில் மிக ஆதரவாக இருந்தார்கள். இன ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் 1989ஆம் ஆண்டுக்குப் பின்புதான் முஸ்லிம்கள் அரசியலில் தமிழ் மக்களில் இருந்து வேறுபடும் நிலைமை உருவாகியது. இவ்வாறான அரசியல் தற்போதைய சூழ்நிலையில் பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகும். பலவிதமான தமிழ் அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் செயற்பட்ட வடக்கு கிழக்கில் தற்போது காலத்தின் தேவையை உணர்ந்து அனைவரும ஒன்றுபட்டு ஒரு குரலாகச் செயற்படுகின்றனர்.

இந்த ஒற்றுமை எத்தனையோ சாதனைகள் மூலம் ஏற்பட்ட ஒரு வெற்றியாகும். சகல தமிழ் மக்களும் இந்த ஒற்றுமை என்றென்றும் நிலைபெறவேண்டுமென்று பிரார்த்தித்து வருகின்றனர். இச் சூழ்நிலையில் யாழ். மாவட்ட முஸ்லிம்கள் 2 வீத அரசியல் பலத்தை வைத்துக்கொண்டு தமிழ் கட்சிகளுக்கு ஆதரவாக இல்லாமல் வேறு கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது 98 வீதமாக உள்ள தமிழ் மக்களை கவலைகொள்ள வைக்கும் ஒரு விடயமாகும்.

முஸ்லிம்களுக்கு அரசியல் உரிமை உண்டு என்ற காரணத்திற்காகப் பல தியாகங்களையும், பேராட்டங்களையும் நாடத்தி தற்போது ஒரு சுமுகநிலைக்கு வர இருக்கும் தமிழ் மக்களையும் அவர்களின் கட்சிகளையும் ஆதரிக்காமல் வேறு கட்சிகளை ஆதரிப்பது தமிழ் மக்களுக்கு முஸ்லிம்கள் மீது அதிருப்தியை ஏற்படுத்தும் ஒரு செயலாகும்.

சமீபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டபோது அக் கூட்டம் நடைபெறுவதை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம்கள் தங்கள் அதிருப்தியை வெளிக்காட்டினர்.

இச்சம்பவம் யாழ். மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்வைக் காட்டுவதாக அமைந்துள்ளது. தற்போது முஸ்லிம் கட்சிகள் பல உருவாகி பலமற்ற அரசியல் நடாத்திவருகின்றன .

இவ்வேளையில் முஸ்லிம்கள் யாருடன் இணைவதன் மூலம் தங்கள் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம் என்பதை ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும். அத்துடன் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட முழு ஆதரவு வழங்குவதுடன் சுய அரசியலில் அமைதி காப்பதும் யாழ். மாவட்ட முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிக மிக அவசியமானதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

### கொள்ளுப்பிட்டி தற்கொலைத்தாக்குதல்

# கொலையாளிக்கு உதவிய பெண்ணுக்கு டிசம்பர்-1 வரை விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற கொள்ளுப்பிட்டி தற்கொலைத் தாக்குதலின்போது குண்டுதாரிக்கு உதவினர் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்ணின் விளக்கமறியல், மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி அலுவலகத்தில் முன்னர் பணிபுரிந்தார் எனக் கூறப்படும் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சத்தியலீலா சிவகுமாரி என்ற பிரஸ்தாப யுவதியின் வழக்கு கடந்த புதன்கிழமை கொழும்புக் கோட்டை நீதிமன்றில் நீதிபதி எஸ்.சரத் கருணாரட்ண முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது சந்தேக நபரை பாதுகாப்புக் காரணங்களினால் நீதிமன்றில் ஆஜர் செய்யமுடியவில்லை என்றும், சிறைச்சாலை நீதிமன்றில் அவர் ஆஜர் செய்யப்படுவார் என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விளக்கத்தைக் கேட்ட நீதிபதி சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ற)

# பரீட்சையை வவுனியாவில் நடத்துமாறு கோரிக்கை

(வவுனியா)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்படும் 2004, 2005 ஆம் ஆண்டுக்கான கல்வி முதுமாணி பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சையை பரீட்சார்த்திகள் நன்மைகருதி வவுனியாவில் நடத்துமாறு வடக்கு கிழக்கு மாகாண பொது ஆசிரியர் சங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தைச சேர்ந்த பல பரீட்சார்த்திகள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

(க-9)

# மாவீரர் வாரம் நவ. 21 - 27

## அணையாமல் காத்திடுவோம்

தேசத்தின் முன்னே பாசம் சிறிதென்று
செந்தமிழைக் காத்திட வீறுகொண்டெழுந்து
விடுதலைப்போரிலே வீரத்தைக் காட்டி
விதையாகி மண்ணில் அமைதியாய் உறங்குகின்றீர்

கார்த்திகை பிறந்தால் கண்கள் கலங்கிவிடும்
கண்ணீரும் வழிந்தோட கடல்மட்டம் உயர்ந்துவிடும்
கானகத்துக் குயில்களெல்லாம் இசைபாட ஓடிவரும்
கார்முகிலும் மனமுருகி மழையாகப் பொழிந்துவிடும்

ஆயிரத்தில் ஒருவனாய் காவியத்தில் இடம்பிடித்து
ஆலயத்து மணிகளாய் எங்கும் ஒலித்திடுவீர்
அழியாத நினைவுகளாய் எம்மனதில் நிலைத்திருக்க
அகல்விளக்கை ஏற்றிவைத்து அணையாமல் காத்திடுவோம்

விஜய் ஏபிரகாம்
பாசையூர்

## தமிழீழக் காவலரை எண்ணுவோம்

எழுச்சியின் திறவுகோலாய் எழுந்தவர்கள்
எண்ணத்தின் நாற்றாங்காலாய் நிமிர்ந்தவர்கள்
விழிப்புற்ற தாயகம் காண விழைந்தவர்கள்
விடிவெள்ளித் தூதாய் ஆகி நிமிர்ந்தவர்கள்
அழிவில்லா வரலாறுபடைக்க பிறந்தவர்கள்
அன்னை மண் விலங்கொடிக்க நினைத்தவர்கள்
தளர்வில்லா தமிழ் மானத்துடன் எழுந்தவர்கள்
தமிழீழ காவலராய் அமைந்தவர்கள்

மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன்

# மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு செல்வதற்கான வாகன ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் குடும்பங்களை மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லும் வாகன ஒழுங்கு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, விசுவமடு, முள்ளியவளை, அளம்பில், வன்னிவிளாங்குளம், ஆலங்குளம், முழங்காவில், ஆண்டாங்குளம், பண்டிவிரிச்சான், ஈச்சன்குளம் மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலுள்ள மாவீரர்துயிலும் இல்லங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாட்டு விபரம் வருமாறு;

யாழ். மாவட்டத்தில் நல்லூர் நெல்லியடி, கொடிகாமம் ஆகிய மூன்று பிரதான நிலையங்களில் இருந்து மேற்குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்கு பெற்றோர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் .

அதற்கு முன்னராகக் குறிப்பிட்ட நிலையங்களுக்கு வந்து சேர வேண்டிய பெற்றோர்கள் அவர்களது வீட்டிற்கு அருகிலுள்ள அரசியல்துறை செயலகங்களிலும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அருகில் உள்ள பிரதான சந்திகளிலும் இருந்து குறிப்பிட்ட நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

பிரதேசங்களில் இருந்து நல்லூர், நெல்லியடி, கொடிகாமம் ஆகிய பிரதான நிலையங்களுக்கான வாகனம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் காலை 9.00 மணிவரை புறப்படும்.

பிரதான நிலையங்களிலிருந்து மேற்குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்கான வாகனம் அன்றையதினம் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை புறப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு பெற்றோரை அழைத்துச் செல்லும் வாகன ஒழுங்கு விபரம் வருமாறு:-

மாவீரரின் பெற்றோர்களது வீடுகளுக்கு அருகிலுள்ள அரசியல் துறை செயலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட பிரதான சந்திகள் ஆகியவற்றிலிருந்து துயிலும் இல்லங்களுக்கு அண்டிய கௌரவிப்பு மண்டபங்களுக்கு பெற்றோர்கள் அழைத்துச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான வாகனங்கள் ஆரம்ப இடத்திலிருந்து அன்றைய தினம் மதியம் 1.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை ஆரம்ப இடத்திலிருந்து புறப்படும் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி அறிவித்துள்ளார். (ற)

# பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்காவிட்டால் நாடு யுத்தத்தால் அழிந்துபோவது திண்ணம்

## பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்காது விட்டால் நாடு மீண்டும் யுத்தம் என்ற அதள பாதாளத்திற்குள் விழுந்துவிடும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தேக்கநிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த வாய்ப்பை நழுவவிட்டு, மீண்டும் யுத்தம் ஏற்படும் சூழ்நிலை உருவாகுமானால் அது நாட்டை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குவதோடு, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடும் என்றும் கூறினார். (ந-4,8)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் மாவீரர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விவாத சுற்றுப்போட்டியில் தெரிவானோருக்கான பரிசளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பேரவைத் தலைவர் ப. பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்புச் செய்யும் வைபவமும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகள் அடங்கிய கைந்நூல் மற்றும் மாவீரர்களின் தியாகங்கள் பற்றிய கவிதை ஒலிநாடாவும் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-8)

## ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசின்

# வரவு - செலவுத் திட்டத்தினால் தமிழர்களுக்கு நன்மையில்லை!

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் வடக்குக் கிழக்கு மக்களுக்கு எவ்வித நிவாரணத்தையும் வழங்கவில்லை எனவும், எதிர்பார்த்தளவு நிதியுதவி வடக்குக் கிழக்கு புனரமைப்புக்குக் கிடைக்கவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சிங்கள அரசாங்கங்கள் எப்போதும் தமிழ் மக்களை அடிமைகளாக நினைக்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கி அவர்களை எல்லாவகையிலும் ஒதுக்கிவிடுகிறார்கள் என்பதை இந்த வரவு செலவுத் திட்டம் மூலம் அறியமுடிகின்றது என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இதுபற்றிக் கூறுகையில், தமிழ்மக்களின் அபிலாஷைகளை இந்த வரவுசெலவுத் திட்ட யோசனைகள் பாழடிப்பதாகவும், தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு இது மதிப்பளிக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத் திட்ட யோசனைகள் வார்த்தையளவில் மாத்திரம் இருப்பதாகவும், செயல்ரீதியாக அமையவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (க-4)

## பயிற்சியை நிறைவுசெய்யும்

# பட்டதாரிகள் பெப்ரவரியில் சேவைக்குள்ளீர்க்கப்படுவர்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் குறிப்பாக பயிற்சிகளை நிறைவுசெய்யும் பட்டதாரிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் அரச சேவையில் உடனடியாக சேர்த்துக்கொள்ளப்படுவர் என பிரதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பல லட்சக் கணக்கான ஊழியர்களை சேவையில் இருந்து நீக்க கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு திட்டமிட்டிருந்ததாகவும் பிரதியமைச்சர் குற்றம்சாட்டினார். (க-08)

# புளொட் - பொதுமக்கள் வவுனியாவில் முறுகல்

(வவுனியா)

பொதுமக்களுக்கும் புளொட் இயக்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக பொதுமக்கள் இருவர் காயமடைந்து இருப்பதாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் கோவில்குளத்தில் தண்ணீர எடுப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சுமன், சதாசிவம் ஆகியோர் பொதுமக்களுடன் முரண்பட்டதாகவும், கத்திகள் சகிதம் பொதுமக்களை தாக்கமுற்றபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் பொதுமக்களுக்கும் புளொட் இயக்கத்தினருக்கும் இடையே முறுகல்நிலை முற்றவே மேலும் பல புளொட் இயக்க உறுப்பினர்கள் தடிகள், பொல்லுகள் சகிதம் அங்கு வந்ததாகவும் இதன் போது ஏற்பட்ட கைலப்பில் கோவில்குளத்தைச் சேர்ந்த அன்னராசா, செந்தூரன் ஆகியோர் காயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையிடம் மக்கள் முறையிட்டதைத் அடுத்து அப்பகுதிக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் சென்றதும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்ததாகத் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் இச்சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸாருக்கும் தாம் அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார். (இ-4)


## பதவி வெற்றிடம்

- செய்தி ஆசிரியர்
- உள்ளக அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள்)
- ஒப்புநோக்குநர் (பெண்கள்)
- சிற்றூழியர்கள் (தேநீர் தயாரிப்பு மற்றும் இதர வேலைகள் - ஆண்கள்)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்)

தகுதியுடையவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை ஆளணி முகாமையாளர் வலம்புரி - சங்குநாதம், இல.15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி - சங்குநாதம்


வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை - சங்கரத்தை பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக
நடாத்தப்பட்ட

# கவிதைப்போட்டி - 2004 முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி....

| | |
|---|---|
| திரு.கந்தையா ஆனந்தராசா | அரச வீதி, உரும்பிராய். |
| திரு.வேலுப்பிள்ளை முருகானந்தசோதி | நாவலர் வீதி, திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை. |
| திரு.அபிர்ராஜன | 60, கோவில்வத், சுண்டுக்குளி, யாழப்பாணம. |
| திருகணபதிப்பிள்ளை சுவகாருணியம் | பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். |
| திருமதி.சௌமிகா பாலபாஸ்கரன் | பொதுநூலகம், யாழ்ப்பாணம். |
| செல்வன்.கைலாசநாதன் திருக்குமரன | கரணவாய் மத்தி, கரவெட்டி. |
| செல்வி.பத்மநாதன் மயூரதி | யா/வ.ம.ம.வி, வல்வெட்டித்துறை. |
| செல்வி.பிரேமினி சபாரத்தினம் | பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. |
| செல்வி.லிங்கநாதன அகிலா | 50/45, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| திரு.மனாசை டேவிட் தம்பிராஜா | 35, இராசாவின் தோட்டவீதி, யாழ்பபாணம். |
| செல்வி.இராசசிங்கம் ஸ்ரீகௌரி | வண்ணார்பண்ணை, முள்ளியவளை, முல்லைத்தீவு. |
| செல்வன்.செல்லத்துரை கார்த்தீபன் | இல.12, பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| செல்வன்.சிவஞானம் இன்பராஜ | மீசாலை மேற்கு, மீசாலை. |
| செல்வி.நித்தியா யோகராஜா | 18A மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| செல்வன.வர்ணகுலசிங்கம் பிரதீபன் | இல.56, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில். |
| செல்வன்.துரைராசா ஜேந்திரன் | சென்.செபஸ்தியார், வீதி, கோண்டாவில் கிழக்கு. |
| திரு.வல்லிபுரம் யோகானந்தசிவம் | வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டை. |
| திரு.சேவியர் வில்பிரட் சததியாப்பிள்ளை | 3ஆம் வட்டராம், அல்லைப்பிட்டி. |
| திருமதி.கணேஸ்வரி தனமூர்த்தி | இல.111, செம்மணிவீதி, யாழப்பாணம். |
| செல்வி.ஆனந்தராணி வயிரமுத்து | புளியர் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு. |
| திரு.இரத்தினசபாபதி தியாகராசா | நீர்வேலி மத்தி. |
| செல்வன்.இராசலிங்கம் கஜேந்திரன் | சங்கரத்தை குளத்தடி, வட்டுக்கோட்டை. |
| செல்வி.புராதனி ஏழூர்நாயகம் | பன்னாலை, தெல்லிப்பளை. |
| செல்வன்.ஜோர்ச் ஜெஸ்ரின் | 28/1, A.Y ரோட், கொழும்புத்துறை. |
| செல்வன்.சிவஞானம் ஜெயானந்தன் | சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கு. |
| செல்வி.சின்னையா கீதா | சீனித்தொழிற்சாலை வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| செல்வி.ஜினித்தா முருகையா | மே/பா.கு.தர்மினி, 3ஆம் கட்டை, சிங்காரகர் வளவு, கட்டைப்பிராய். |
| திரு.கனகரத்தினம் நாகேஸ்வரா | சண்டிலிப்பாய் மேற்கு. |
| செல்வன்.கந்தசாமி பிரதீபன் | மே/பா.கி.நாகராசா, ஆலங்குழாய் வீதி சண்டிலிப்பாய் வடக்கு. |
| செலவி.அனரனி யசிந்தா அந்தோனப்பிள்ளை | சேவில் ஒழுங்கை, தும்பளை மேற்கு, பருத்தித்துறை. |
| செல்வன.விக்ரர்றொபேட்சன செய்ரர் ஜோன்சன் | 123/1 சுருவில் வீதி, ஊர்காவற்றுறை. |
| திரு.ஆறுமுகம் ரவீந்திரன் | சட்டநாதர், வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். |
| செல்வி.கௌசலா கந்தசாமி | இராஜ வீதி, கணேசபுரம், கல்வியங்காடு. |
| செல்வி.பேரின்பநாயகம் புஸபாஜினி. | மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. |
| செல்வன்.செல்வம் வசீகரன். | புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |
| செல்வன்.பூபாலசிங்கம் புலேந்திரன் | கமலவாசம், வட்டுகிழக்கு, வட்டுக்கோடடை. |
| செல்வி.சுப்பிரமணியம் சிவதுர்க்கா | குமரகோட்டம், கோண்டாவில். |
| செல்வி.பாலசுந்தரம் கார்த்திகா | 'ஈஸ்வரி வாசம', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. |
| செல்வி.ஸ்ரீ.புராதனி இராஜகோபாலன் | லோட்டாஸ் வீதி, மானிப்பாய். |
| திருமதி.சாவித்திரி அத்துவிதானநதன் | 214/5 இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். |
| திரு.சின்னத்துரை சிவபாதம் | 16, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |

# சங்கரராமன் கொலைக்கு ஆவண ஆதாரங்கள்

# அரச வழக்கறிஞர் அறிவிப்பு

சிறி



**கொலை வழக்கில் கைது செய்யபபட்ட சங்கராச்சாரி யார் ஜெயேந்திர சரஸ்வதி சவாமிகளை பொலிஸ் காவலில் எடுத்து விசாரிப்பது குறித்த மனு மீது காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணை நடை பெற்றது. இதற்காக வேலூர் மத்திய சிறையிலிருநது ஜெயேந்திரர் அழைத்துவரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபபட்டார்.**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நிதிபதி தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

**ஜெயேந்திரரை பொலிஸ்காவலில் விசாரிக்க மனு**

காஞசி வரதராஜப் பெருமாள கோவில மேலானர் சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஜெயேந்திரரை 5 நாள் தங்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி காஞ்சிபுரம முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்யத மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இதையொட்டி வேலூர் சிறையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்ட ஜெயேந்திரர் நண்பகல் 12.45 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அரசு வழங்கறிஞர் ஜெயக்குமார் கோவில் மேலாளர் கொலையில் யார் யாருக்கு பணம் தரப்பட்டது. என்பது குறித்து ஜெயேந்திரரிடம் விசாரிக்க அவரை 5 நாள் பொலிஸ் காவலுக்கு அனுமதக்கவேண்டும் என்று கோரினார். இதற்கு ஜெயேந்திரரின் வழங்கறிஞர் ஜெ.என்.தினகர் கடும் எதிர்ப்புத் தெரிவத்தார். ஜெயேந்திரரும் பொலிஸ காவல் என்பது தண்டனைக்குச் சமம் என்று கூறினார். சுமார் 3 மணிநேரம் நடை பெற்ற இரு தரப்பு வாதங்களுக்குப் பறகு தீர்ப்பு வழங்குவதை மறுநாள 10.30 மணிக்குத் தீர்ப்பு வழங்குவதாகக் கூறினார் உடனே ஜெயேந்திரர் குறுக்கிட்டுப் 10.30 மணியிலிருந்து 12.00 மணிவரை இராகுகாலம் என்றும் அந்தச் சமயத்தில் தீர்ப்பு வழங்கவேண்டாம என்றும் கேட்டுக்கொண்டார். இதற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்புத் தெரிவித்தார். ஏற்கனவே அறிவித்த படி 10.30 மணிக்குத தீர்ப்பு வழங்கப்படுமென்று நீதிபதி தெரிவித்தார். இதனிடையே ஏற்கனவே நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து நீதிமன்ற வளாகத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

**கதிரவன் ஒப்புதல் வாக்கு மூலம்**

சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முக்கிய குற்றவாளில் ஒருவரான கதிவரன், காஞ்சி நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கதிரவன் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே தான் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பின்னர் பொலிஸ் நடத்திய விசாரணையில் சங்கரராமன் கொலை தொடர்பாக ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கக் கதிரவன் ஒப்புக்கொண்டான். இதையடுத்துக் காஞ்சிபுரம் இரண்டாவது நடுவர்மன்ற நீதிபதி தாமேதரன் முன் கதிரவன் ஆஜர்ப் படுத்தப்பட்டார். அப்பொழுது கதிரவன் இரகசியமாக அளித்த ஒப்புதல் வாக்குமூலதைதால் நீதிபதி பதிவு செய்துகொண்டார்.



சங்கரராமன் கொலை பற்றிய முக்கிய தகவல்களைக் கதிரவன் தெரிவித்துள்ளதாகத் கூறப்படுகிறது. இதற்கிடையில கூலிப்படைத் தலைவனான அப்பு ஆர்.திராவின் தலைமறைவாக இருப்பதாகவும் ஆந்திராவில் உள்ள நீதிமன்றத்தில் சரணடைய அபபு திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால அதற்கு முன் அப்புவைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**கொலையில் நேரடித் தொடர்பு**

சங்கரராமன் கொலையில் சங்கராச்சாரியார் ஜெயேந்திராவுக்கு நேரடித் தொடர்பு இருப்பதற்கான பல ஆவண ஆதாரங்கள் இருப்பதாக உயர் நீதிமன்றததில் தெரிவித்த அரச வழக்கறிஞர் அவரை ஞானேஸ் விடுதலை செய்தால் சாட்சிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமென வாதிட்டார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயேந்திரரின் பிணை மனு மீது நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக நடைபெற்ற விசாரணையின் போது அவருக்கு மூத்த வழக்கறிஞர் ராம் ஜெட் மலானி ஆஜராகி வாதங்களை எடுத்துரைத்தார். பின் அரச சார்பில் ஆஜரான உச்ச நீதிமன்றம் மூத்த வழிக்கறிஞர் துளசி, சங்கராச்சாரியார் சமயப பணியில் இருந்து விலகி தவறான பாதையில சென்றதால் தான் கொலைக் குற்றம சாட்டப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் பட்டுள்ளதாக கத் தெரிவித்தார்.

விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில் ஜெயேநதிரரைப் பிணையில் விட்டால் சாட்சிகள் கலைக்கப்படுவதோடு சாட்சியங்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அரசு வழக்கறிஞர் கூறினார்.

சங்கரராமன் கொலையில் ஜெயேந்திரருக்கு நேரடித் தொடர்பு இருப்பதற்குப் பல ஆவணங்கள் ஆதாரமாக உள ளது எனத் தெரிவித்த அவர் அவற்றைத தற்போது வெளியிட்டால் சாட்சியங்கள கலைக்கபபடலாம் என்றார். கொலைக்காக சங்கர மடத்துக் வங்கிக் கணக்குகளிலிருந்து 35 இலட்சம் ரூபா எடுத்துள்ளார்கள் என்றும் இந்தப் பணம் கொலைக்குக் கூலியாகவும், போலிக குற்றவாளிகளை ஆஜர்ப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மேலும் ஜெயேந்திரர் நேபாளத்துக்குத் தப்பியோடத் திட்டமிட்டிருந்தது பற்றிய வீடியோ ஆதாரம் இருப்பதாகவும் அரச வழக்கறிஞர் துளசி தெரிவித்தார். விசாரணையின் போது ஜெயேநதிரர் கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோக்காட்சி நீதிபதி முன் போட்டுக் காட்டப்பட்டது.

அதில் கைது செய்யப்படுவதற்கு முன் ஜெயேந்திரர் செல்போனில் பேசுவது, பொலிஸாரிடம் வாக்கு வாதம் செய்வது உள்ளிட்ட காட்சிகள் இடம் பெற்று இருந்தன. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பாலசுப்பிரமணியன் தீர்ப்பு வழங்குவதை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார். (து)

---

## வடக்கு - கிழக்கில் புதிதாக 11 மத்தியஸ்த சபைகளை அமைக்க நடவழிக்கை

(கொழும்பு)

நிதி அமைச்சின் கீழ் செயற்படும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தற்போது செயற்படும் மத்தியஸ்த சபைகளுககு மேலதிகமாக 11 மத்தியஸ்த சபைகளை ஏற்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல விடுத்துள்ளது.

மத்தியஸ்த சபை ஆணைக் குழுவின் செயலாளர் ஜீ.டி.கே. கம்லத்தினால் வெளியிடப் பட்டுள்ள இவ்வர்த்தமானி அறிவித்தலில் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயல்ாளர் பிரிவிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று தெற்கு, களுவாஞ்சிக்குடி, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் திருகோணமலை மாவட்டத்தில் மொறவேவ; குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுகள், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம், நாளாட்டான், முசலி, மடு மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் புதிதாக மத்தியஸ்த சபைகள் ஏற்படுத்தப்படவுள்ளது. (க-9)

## மருந்துத் தட்டுப்பாடுகளை நீக்க இந்தியாவிடம் உதவி கோரப்படும்

(கொழும்பு)

நாடெங்குமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் களைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார நலன்புரி மற்றும போஷாக்கு அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் "சுவ சிறிபாயா" கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய வினாவிற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆயிரம் இளைஞர்களை வெளிவாரி மருந்தாளர்களாகப் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## அரசின் வரவு -செலவுத் திட்டத்தில் வட-கிழக்கு மாகாணம் புறக்கணிப்பு

### எதிர்த்து வாக்களிக்கப் போவதாகக் கூறுகிறார் ஹக்கீம்


(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத திட்டம் தென் பகுதியை மட்டும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை இதனால் இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதை எதிர் பார்த்து தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத்திட்டத்தால், நாட்டில் மிகப் பெரும் பணவீக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அபாயம் உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இத்திட்டத்தைக கருத்தில் கொள்ளப்படாததுடன், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் பற்றிபேசப்படாததும் எமது



எதிர்ப்புக்குரிய காரணமாகும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று செயற்படும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கையினை எடுப்பதற்குக் கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது எனவும் ரவூப் ஹக்கீம் மேலும் கூறினார்.(ற-8)

# உறவுகளைப் பேணிக்காக்க நாவடக்கம் மிக அவசியம்

நாவை அடக்கயாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது



கொடியது. சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவது அந்நாவே. கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே. போற்றலும் தூற்றலும் ஒரே வாயிலிருந்து வருகின்றன. என் சகோதர, சகோதரிகளே இவ்வாறு இருத்தலாகாது. ஒரே ஊற்றிலிருந்து நன்னீரும் உவர் நீரும் சுரக்குமா?''

(யாக்கோபு 3:8:11)

வசைபாடும் தன்மை நம்மில் அநேகரிடம் இருக்கின்றது. மற்றவர்களைக் குறித்தும், அவர்களின் ஒவ்வொரு அசைவுகளைக் குறித்தும் மறையான கருத்துக்களை பேசிக் கொண்டே இருக்கின்றோம். இவை உறவுக்கு பகையாக அமைந்தாலும் அவற்றை அகற்ற நாமும் முயற்சிப்பதில்லை, மற்றவர்களும் முயற்சிப்பது இல்லை.

உரையாடல்களில் எமது

## பரமபிதா காட்டிய பாதை

முகபாவனை, தொனி, அசைவுகள என்பன முக்கிய இடம் பெறுகின்றது. இவை தான் உறவுகளை உடைப்பதும் இணைப்பதும் ஆகும்.

ஒரு விடயத்தை எடுத்துச் சொல்லுகின்ற முறை மிகவும் பிரதானம். ஒருவர் ஒரு விடயத்தைப் பற்றி அடிக்கடி தொல்லை கொடுப்பவர் என்று வைத்துக் கொள்வோம்.

அவை நடைமுறைக்கு சாத்தியப்பட்டு வராதவை என்றும் வைத்துக் கொள்வோம். இத்தகைய ஓர் சூழலில் அவருக்கு அந்நிலையைத் தெளிவுறுத்த வேண்டும். அதனை தெளிவுறுத்த பாவிக்கப்படும் சொற்களை நாசுக்காக எடுத்து விளம்பல் வேண்டும்.

நெருப்பினால் சுட்ட புண் ஆறும், ஆனால் நாவினால் சுட்ட புண் ஆறுவதில்லை என்று கூறுவது போல் அடிபட்டவர்கள, வெட்டுப்பட்டவர்கள் ஒன்றாகி இருக்கின்றார்கள். நட்பாக- உறவாக- தமது பழைய பகையை மறந்து போகின்றார்கள், ஆனால் நாவினால் கடுமையாக சண்டை பிடிப்பவர்களின் உறவுகள் நீண்டகாலம் செல்லுகின்றது ஒன்றுசேர. இக் கருத்துக்கள் வாய்ச்சண்டையை விட்டு அடிபடுங்கள் என்பது கருத்தல்ல. மாறாக ஒருவர் சொன்ன வசைமொழிக்கு அவர் உறவுவேண்டாம் என்று இறுதி மட்டும் பிடிவாதமாய் இருப்பது நல்லது.

இங்குதான் புத்தர் பற்றிய சிறிய கதை நல்லபாடம் புகட்டுகின்றது. ''புத்தர் ஒரு வீட்டுக்குச் சென்று யாசித்தார். வீட்டுக்காரன் அவரை வசைபாடினான். புத்தர் அவனைப் பார்த்துக் கூறினார். ''ஐயா! நீ எனக்கு அரிசியைப் பிச்சையிடும் போது அதை நான் ஏற்றுக்கொண்டால் அரிசி எனக்குச் சொந்தம். மறுத்திருந்தால் அரிசி உனக்கே சொந்தம். உன் வசைகளை நான் ஏற்க மறுக்கிறேன். அவை உனக்கே சொந்தம் என்றார்''

புத்தரின் இச் செயல் போன்று நாமும் மற்றவர்களின் வசைமொழிகளை ஏற்காமல் இருப்போம். ஏற்றுக் கொண்டால் தான் பிரச்சினை தோன்றுகிறது. மனமும் சலிப்படைகிறது. பழிவாங்கும் உணர்வும் ஏற்படுகின்றது.

ஒருவர் எம்மை பார்த்து ''கள்ளன்'' என்று பேசுகின்றார் என்றால், அதற்கு எமது பிரதி பலிப்பு எப்படி இருக்கின்றது. நான் ''கள்ளன்'' இல்லை என்றால் எவ்வித சலனமும் இல்லாமல் புத்தர் சொன்னது அல்லது நினைத்தது போல நீ பேசிய வசைமொழியை நீயே வைத்துக் கொள் என்று இருத்தல் நன்று. அவர் அப்படி பேசினார் என்பதற்காக, அவர் சார்ந்தவர்

**யாழ்.ராதவல்லி**

களை வெறுத்தும், அவரது சுக துக்கத்தில் பங்கெடுக்காது இருத்தல் நல்லதல்ல.

உண்மையாக நாம் "கள்ளன்" என்றால், அவர் சொன்னதை ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும். ஏனெனில் அவர் பேசுகின்றார்.

உண்மைகளைப் பேசிக் கொளவோம். அதற்காக உறவுகளை பகையாக்கிக் கொள்வது நல்லதல்ல மாறாக எம்மைப் பார்த்துத் தேவையில்லாமல் வசைபாடினால் நாம் அதனை நீ பாடிய வசைமொழி உனக்கே சொந்தம் என்று இருத்தல் நல்லது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட புனரமைப்பு புனர்வாழ்வு சம்பந்தமான மாதாந்த செயற்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.செயலக புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது நிவாரணம், விவசாயம், மீன்பிடி மற்றும் மீள்குடியேற்றம் போன்ற விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளன. (ற-5)

## சேவைக்காலப் பயிற்சி

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான விசேட சேவைக் காலப் பயிற்சி நாளை திங்கட் கிழமை முதல் மூன்று நாட்கள் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல புதிய விடயங்கள், நவீன தொழில்நுட்பவிடயங்கள் தொடர்பான விரிவான பயிற்சிகள் இச் சேவைக்காலப் பயிற்சியாக வழங்கப்படவுள்ளன.

திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் சகல தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் மேற்படி சேவைக்காலப் பயிற்சியில் தவறாது கலந்து கொள்ளுமாறு சகல உளளூராட்சிமன்றங்கள், பிரதேச செயலர்கள், கல்வி, சுகாதாரத்திணைக்களத் தலைவர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகின்றது. (க-252)

## மதுவரித் திணைக்களச் சட்டங்களை கடுமையாகக் கடைப்பிடிக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மதுபானம் அருந்துவோரின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

பாடசாலை மாணவர்கள் கூட இன்றைய காலகட்டத்தில் மதுபானம் அடுத்துவது சாதாரணமான ஓர்விடயமாக மாறியுள்ளது. இதனால், யாழ்ப்பாணக் கலாசாரம் மற்றும் பண்பாடுகள் சீர்குலைவதுடன், சமூகத்தில் பல புதிய புதிய பிரச்சினைகளும் முளைவிடுகின்றன.

எனவே, இவற்றைக் கட்டுப்படுத்த ஏற்கனவே இருக்கும் சட்டங்களை முழுமையான முறையில் அமுல்ப்படுத்தப் போவதாக மதுவரித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கமைய 21 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் (வயது எல்லை இல்லை) சித்த சுவாத்தீகமற்ற நபர்கள், கடமையில் இருக்கும் மதுவரி உத்தியோகத்தர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் புகையிரதத் திணைக்கள ஊழியர்கள், ஏற்கனவே குடிபோதையில் இருப்பவர்கள், கலகம் விளைவிப்பவர்கள் என அறியப்பட்டோர் ஆகியோருக்கு மதுபானங்களை விற்பதற்கோ அல்லது அவற்றைக் கொடுப்பதற்கோ தடை விதிக்கப்படவுள்ளது.

மேலும் தொற்றுநோய் பரவி இருக்கும் பிரதேசங்களிலும், மேதினம், வெசாக்தினம் உள்ளடங்கலாக அனைத்து போயா விடுமுறை தினங்களிலும் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவேண்டும் எனவும் அவ அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இச் சட்டங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளன. யாழ்.மாவட்டத்தில் மாதாந்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் போததல் பியரும், ஒரு இலட்சதது 75 ஆயிரம் போத்தல் கொழும்புச் சாராய வகைகளும் விற்பனை செய்யப்படுவதாகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

இவற்றில், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் சாராயம் மற்றும் கள் என்பன கணக்கில் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

## மகனைக் காணவில்லையென ம.உ.ஆ.குழுவில் தாய் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற தனது மகனைக் காணவில்லையென தாயொருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி உரும பிராயில் இருந்து கிளிநொச்சியில் வசிக்கும் மூத்த சகோதரியின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச சென்ற தனது மகன், இது வரை கிளிநொச்சியில் உள்ள மூத்த சகோதரியின் வீட்டுக்கோ அன்றி தமது வீட்டுக்கோ வந்து சேரவில்லையென தாயாரான பசுபதி அன்னப்பிள்ளை என்பவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த பசுபதி கஜேந்திரன் (வயது 20) என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார். (ற-5)

## சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் 19 பொதுச் சுகாதாரப் பரிசோதக்ர்களுக்கு எதிர்வரும் ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் வருடாந்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல் பிள்ளை சகல பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்க்கும் கடித மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் இடமாற்றலாகும் சகல பொதுச் சுகாதார பரிசோதகர்களும் புதிய நிலையத்தில் கடமையை தவறாது பொறுப பேற்பது மிகவும் அவசியம் எனவும் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் இடமாற்றம் பெறவிருக்கும் உத்தியோகத்தர்களின் பெயர்களும் இடங்களும் வருமாறு:-

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமைபுரியும் எஸ்.கார்த்தீபன் -தெல்லிப்பழை சுகாதார பிரிவுக்கும், இ.இந்திரஜித் - அளவெட்டிப்பகுதிக்கும், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமணையில் கடமை புரியும் வை.தயாமோகன்-நல்லூர்ப்பகுதிக்கும், பொ.மனோகரன் - இணுவில் பகுதிக்கும், பண்டத்தரிப்பில் கடமை புரியும் பொ.சிவரூபன் - உடுவில் பகுதிக்கும், சுழிபுரம் பகுதியில் கடமை புரியும் வே.ரதீஸன் - வவுனியாத் தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும், தெல்லிப்பழையில் கடமை புரியும் எஸ்.சச்சிதானந்தம் - புக்குடுதீவுப் பகுதிக்கும், இணுவிலில் கடமைபுரியும் பி.சிவகுமார்- சுதுமலைப்பகுதிக்கும், உடுவில் பகுதியில் கடமை புரியும் எல்.ஜெபராசா-மானிப்பாய் சகாதாரப்பிரிவுக்கும், ஏழாலையில் கடமைபுரியும் - எஸ்.பார்த்தீபன்- மானிப்பாய்ப் பகுதிக்கும், சுன்னாகம் பகுதியில் கடமைபுரியும் க.பத்மகுமார்-வவுனியா நெடுங்குளம் பகுதிக்கும், எஸ்.ஜெய்சங்கர் -திருகோணமலை தம்பளகாமம பகுதிக்கும், சாவகச்சேரிப் பிரிவில் கடமைபுரியும் க.நிர்மலானந்தன் -துன்னாலைப்பகுதிக்கும், வரணியில் கடமைபுரியும் என்.சிவபாலன்- கொடிகாமம் பகுதிக்கும், பருத்தித்துறைப் பிரிவில் கடமைபுரியும் ஆர்.ஈஸ்வரன் சுன்னாகம் பகுதிக்கும், செம்பியன் பற்றில் கடமை புரியும் நாகேந்திரம் - வரணி பகுதிக்கும், நெல்லியடிப்பிரிவில் கடமைபுரியும் க.இளங்கோ- செம்பியன் பற்றுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகவும், துன்னாலையில் கடமைபுரியும் பி.பாலதேவா- ஊர்காவற்றுறைப் பிரிவுக்கும், நல்லூர்ப்பகுதியில் கடமைபுரியும் எஸ்.கருணாநிதி - பண்டத்தரிப்புப் பகுதிக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும்; வவுனியாவில் கடமை புரியும் எம்.சஞ்சீவ் நெல்லியடிப்பகுதிக்கும், மேஜஜெயா சுன்னாகப் பட்டிணப்பகுதிக்கும் நியமிக்கப்பட்டுள்னார்கள்.

(க-252)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கோப்பாய் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கொளரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு 7.00மணிக்குப் பொதுக்கூட்டமும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன அத்துடன், மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'தாயக இராகங்கள்' இசை நிகழ்வு மற்றும் 'சங்கநாதம்' எமுசசி இசை நாட்டிய நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (ற)

## கௌரவிப்பு

(துன்னாலை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாவீரர் நாள் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக எதிர்வரும் 23 ஆம் திகதி தமது எல்லைக்குட்பட்ட தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.(ப-101)



தேவதையைக் கண்டேன்

தனுஷ்-ஸ்ரீதேவி

## "சாரி... எனக்கு கல்யாணமாயிடிச்சி"

தெலுங்கில் பல படங்களைத் தயாரித்தவர் ஜி.வி. இவர் தமிழில் முதன் முதல ஒரு படத்தைத் தயாரிக்கிறார். இந்தப் படத்திக்குப் பெயர் 'சாரி எனக்கு கல்யாணமாயிடிச்ச' ஸ்ரீமன் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக சொர்ணமால்யா, ப்ளோரா நடிக்கின்றனர்.

டி.பி கஜேந்திரன், லிவிங்ஸ்டன், மனோபாலா, பொன்னம்பலம், ஷகீலா, ஓமக்குச்சி நரசிம்மா ஆகியோரும் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவு ஆர்.எச்.அசோக், இசையமைப்பாளர்களாக எஸ்.டி என்ற இருவர் அறிமுகமாகின்றனர். இசையமைப்பாளர் தேவாவின் கடைசித் தம்பியான சிவகுமாரும், இசைத் துறையில் பல வருடம் அனுபவம் பெற்ற டோமினிக் என்பவரும் இணைந்து இசையமைப்பாளர்களாக அறிமுகமாகின்றனர்.

நூறு எதிரிகளைக் கூட சமாளித்துவிடலாம். ஆனால் ஒரு நம்பிக்கைத் தூரோகியான நண்பன் மிகப்பெரிய அபாயகரமானவன் என்பதை விளக்கும் கதை இது. நகைச்சுவை கலந்த வித்தியாசமான படமாக உருவாக்குகின்றனர்.



## தெலுங்கில் பிஸி

திரிஷா யாரும் எதிர்பாராத உச்சியில் தெலுங்குப் பட உலகில் இருக்கிறார். பஞ்சாரா ஹில்ஸ் ஹொட்டலில் இவருக்கென தனியறையே ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து தெலுங்கு முன்னணி நடிகர்களும் இவருடன் நடிக்கப் போட்டி போடுகின்றனர். சம்பளமும் ஏகமாம். பின் எப்படி தமிழில் நடிக்க ஒப்புக்கொ'வார்?

## பிரசாந்த் பாணியே தனி

'போலிஸ்' என்ற படத்தில் பிரசாந்த் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். இதற்காக இவர் 'தங்கப்பதக்கம்', 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்', 'இதுதாண்டா பொலிஸ்', 'மூன்றுமுகம்' போன்ற பொலிஸ் படங்களைப் போட்டுப் பார்த்து வருகிறார். அந்தப் படங்களைப் பார்த்து நடிப்பதற்காக இல்லையாம், அவற்றில் வரும் நடிகர்களின் எந்தச்சாயலும் தனது நடிப்பில் இருக்கக் கூடாது என்பதற்காகத்தானாம்.

## சந்திரமுகியில் வித்தியாசமான சண்டைக் காட்சிகள்

'தளபதி' படத்தில் முதல் சண்டைக் காட்சியில் தண்ணீர் தொட்டியில் ரஜினியுடன் மோதியவர் தான் தளபதி தினேஷ். பிறகு பாட்ஷா, அருணாசலம் என் அனைத்துப் படங்களிலும் ரஜனியுடன் இருந்தார். இவரை சந்திரமுகியின் ஸ்டன்ட் மாஸ்டராக ரஜனி போட்டுள்ளார். இதனால் தளபதி தினேஷ் ரஜினிக்கு வித்தியாசமான சண்டைக் காட்சிகளை அமைக்க இரவு பகலாக உழைக்கிறார்.

## ரஜனி படத்துக்கே வடிவேலு அலட்டல்

நல்ல' நாளிலேயே பிடிக்க முடியாது. இப்போது ரஜினிகாந்த் நடிக்கும் சந்திரமுகியில் வேறு நடிக்கிறார். ஏற்கனவே கால்ஷீட் சொதப்பும் இவர், அட்வான்ஸ் வாங்கி டேட் கேட்டால் அது சூப்பர் ஸ்டார் டேட்டாச்சேப்பா எப்படி? கொஞ்சம் பொறு அட்ஜஸ்ட் செய்து தருகிறேன் என்று அலட்டுகிறார். யார் அவர்? வடிவேலுதான்.



அறிந்தும் அறியாததும்

நவ்தீப்-சமிக்ஷா

## திருப்புமுனை வருமா?

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்குனர் பாசில் தமிழ் படமொன்றை இயக்குகிறார். இளையரா்ஜா இசையமைக்கும் இந்தப் படத்தில் பாசில் மகனும் ஷாமும் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள்.

படம் காதலுக்கு மரியாதையைப் போல அடைந்து தனக்கு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தித்தரும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் ஷாம்.

## காமெடி பயிற்சி

பீதாமகனைப் போலவே 'மாயாவி'யிலும் காமடியில் பிய்த்து வாங்கும் வேடம் சூர்யாவுக்கு.

இந்தி நடிகர் ராஜ்கபூர் காமெடியில் கலக்கியவர் என்பதால் அவர் நடித்த 'மேரேநாம் ஜோக்கர்' உள்ளிட்ட படங்களை ரீ.வியில் போட்டுப் பார்த்து தீவிர பயிற்சி எடுக்கிறாராம் சூர்யா.

## பழைய பாணியில் விஜய் ஆட்டம் போட விருப்பம்

நடிகர் விஜய்க்கு கோட்சூட் போட்டு ஆடம்பரமாக நடிப்பதே பிடிக்காத விஷயம். நல்ல லுங்கி கட்டி குத்து டான்ஸ் ஆடுவதில் தான் விருப்பம் அதிகம். இப்படி ஆடிய திம்சுகட்டை, அப்படி போடு போடு.. பாடல்கள் தான் மக்களைச் சென்றடைந்திருக்கின்றன. இதையே இனிவரும் படங்களில் தொடர்ந்து செய்ய இருக்கிறார்.




## இப்படியோர் தண்டனை

காமதேவனை நினைவுபடுத்தும் படம் ரிலீஸ்"க்குத் தயார். பிறகு கவுண்டமணி நடித்திருக்கிறார். உடல்நிலை அவ்வள காலையில் எட்டுமணிக்கே படப்பிடிப்புத்தளத்துக்குப் போய் இதனால் ஒரு மனத்தாங்கலும் ஏற்பட்டிருக்கிறது.

இவருடைய பொறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட ப சில முக்கியமான காமெடி சீன்களை வெட்டித் தள்ளவேண் விட்டாராம். பொறுப்பாக இருந்தால் இப்படியோர் தண்டனை

## கருணாநிதி வசனம் பேசும் சிபிராஜ்

கலைஞர் பெரிய நடிகர்களுக்கெல்லா வசனம் எழுதியிருக்கிறார். எம்.ஜி.ஆர்., சிவாஜி, என்னேஜ் அப்பா சத்தியராஜ் எனப் பலர் அவர் வசனம் பேசி நடித்துள்ளனர்.

அப்படிப்பட்ட பெரியவரின் வசனம் பேசும் பாக்கியம் 'மண்ணின் மைந்தன்' படத்தின் மூலம் எனக்குக் கிடைத்தது அதிர்ஸ்டம் தான்.


இப்போதுள்ள இளம் தலைமுறை நடிகர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கு என்றார் சிபிராஜ்.



# சினிமாச் சிதறல்

## அட்டகாசம் திரைவிமர்சனம்

100 சதவீதம் பொழுதுபோக்கு என்று தலையங்கத்துடன் போடாமல் விட்டுவிட்டார்களே என்று வருத்தப்படவைக்கிற படமாக இருந்தாலும் யதார்த்தம் மாறாமல் திரைக்கதையை எடுத்துச்சென்றதில் இயக்குநர் சரணுக்கு பாராட்டுத் தெரிவிக்கலாம்.



அஜித் + அஜித் என இரட்டைக் குழந்தைகள். அப்பா நிழல்கள் ரவி, அம்மா சுஜாதா. தாதா பாபு அன்ரனியின் கையாளாக இருந்து, அவராலேயே கொல்லப்படுகிற நிழல்கள் ரவி. இதைக் குழந்தையாக இருக்கும் ஒரு அஜித் பார்த்துவிட அவரையும் அன்ரனி குறி வைக்கிறார். வேறு வழியில்லாமல் வெளிநாட்டுத் தம்பதிக்கு அந்தக் குழந்தையைத் தத்துக் கொடுத்துவிட்டு மற்றொரு குழந்தையுடன் சென்னையில் செட்டிலாகிறார் சுஜாதா... என்று ஃப்ளாஷ்பேக் விரிகிறது.

அம்மாவோடு வாழும் அஜித் டிரைவிங் ஸ்கூல் நடத்த, அங்கு வந்து சேருகிறார் பூஜா.






அஜித் - பூஜா கூட்டணி காதல் பாடல் படிக்க, கருணாஸ் - வையாபுரி கூட்டணி காமெடியில் கலக்குகிறது. மற்றொரு அஜித், வெள்ளை வேட்டி சட்டை, கழுத்து நிறைய தங்க நகைகயோடு தூத்துக்குடியில் ரவுடி ராஜ்ஜியம் நடத்துகிறார். அம்மா தம்பி மீது அவருக்குக்கோபம்.

சென்னை அஜித், ஏதேச்சையாக தூத்துக்குடி செல்ல குழப்பம் ஆரம்பிக்கிறது. வில்லன்கள் - மகாதேவன், அன்ரனி துரத்த அடிதடி ஆரம்பிக்கிறது. தாதா அஜித் சென்னையிலும், அவர் தூத்துக்குடியிலும் மாறிக கொள்ள, ஒரு கட்டத்தில் உண்மையைப் புரிந்துகொண்டு அம்மாவிடம் அன்பு காட்டும் தாதா அஜித் எதிரிகளை வீழ்த்துகிறார்.

அஜித் - பூஜா கூட்டணி அட்டகாசத்தைத் தொடர, மீண்டும் தூத்துக்குடிக்குப் புறப்படுகிறார் மற்றொருவர். பிறகென்ன... சுபம்தான்.

மீண்டும் அஜித் - இரட்டை வேடம் என்பதால் ஏற்படும் ஈர்ப்புக்குப் பாதகம் வராமலிருக்க நிறையச் சிரமப்பட்டிருக்கிறார்.

ஒரு அஜித் அமைதியாக, அதிர்ந்து பேசாத சாதுவாக இருக்க.. மற்றொருவர் அடாவடியாகத் தடாலடியாகச் செய்கிறார். ஒருவர் சென்னைத் தமிழ்... மற்றொருவர் தூத்துக்குடி தமிழ்...

இரண்டிலுமே இரண்டு அஜித் தெரிகிறார். குரலில், முகபாவத்தில், நடையில் என்று நடிப்பில் கலக்கியிருக்கிறார். அஜித்தின் நடிப்பில் மெருகு கூடியிருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அழகுப் பதுமையாக வந்து செல்லும் பூஜா நடிப்பதற்கு வாய்ப்பு இல்லை. அஜித்துக்கு ஜோடியாக இவர் இன்னும் வளரவேண்டும். காமெடிக் கூட்டணியாக கருணாஸ் - வையாபுரி, ரமேஷ்கண்ணா நிறையத் தந்திருக்கின்றனர். குறிப்பாக, கருணாஸ் - அஜித்தின் காமெடி நகைக்க வைக்கிறது. இரட்டைவேட அஜித், மாறி மாறிக் காட்சிகள் என்று இயக்குனருக்கு நிறையச் சிரமம் தரும் திரைக்கதையை லாவகமாகக் கையாண்டிருக்கிறார் சரண்.

வழக்கமாக ஜொலிக்கும் சரண் - பரத்வாஜ் கூட்டணிக்கு என்ன ஆனதோ பாடல்களில் கவனம் செலுத்தப்படவில்லை. அதுபோல பாடல் காட்சிகளைப் பதிவு செய்வதிலும், ஏனோ... அவசரம். சூப்பர் சுப்பராயனின் சண்டைக்காட்சிகளில் புதுமை இல்லாவிட்டாலும் நெருடல் குறைவு. ஹிட்டுக்காகப் பசித்திருக்கும் அஜித்துக்கு இந்தப்படம் வஞ்சம் வைக்கவில்லை. *அட்டகாசம் - அமர்க்களம்.*

## ...ண்டனையா?

...”க்குத் தயார். இதில் நீண்ட இடைவெளிக்குப் ...லை அவ்வளவாக ஒத்துழைக்காத போதும் ...துக்குப் போய் விடுவாராம் கவுண்டர். ...டிருக்கிறது.

...திக்கப்பட்ட படத்தின் முக்கியஸ்தர் ஒருவர், ...் தள்ளவேண்டுமென்று கறாராகச் சொல்லி ...யார் தண்டனையா?

## ...சிபிராஜ்

... வசனம் ... அப்பா ...டித்துள்ளனர். ...பகும் பாக்கி ...் எனக்குக் ... ...கர்களுக்குக் ...கு என்றார்






'சந்திரமதி' - பிரபு, ரஜினி

# யாழ். குடாநாட்டில் நேற்று ஹர்த்தால்!


















# மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-5
தொடர் -V

மு. திருச்செல்வம்

3. தமிழீழ அரசில் சாதி அழிக்கப்பட்டுத் தீண்டாமை என்ற கொடிய முறையும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் நிலையும் வேரோடு களையப்பட்டு எந்த உருவத்திலும் அவற்றை அனுஷ்டிப்பது, சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படும்.

4. தமிழீழம் மதச் சார்பற்ற அரசாக இருக்கும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்கள் அனுஷ்டிக்கும் மதங்கள் எல்லாவற்றுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் அளிக்கும்.

5. தமிழீழத்தில் அரசமொழியாகத் தமிழ் இருக்கும். அதேநேரத்தில் சிங்கள அரசில் வாழக்கூடிய தமிழ் பேசும் சிறுபான்மையோருக்குக் கிடைக்கும் உரிமைகளுக்குச் சமதையாகத் தமிழீழத்தில் வாழக்கூடிய சிங்களம் பேசும் சிறுபான்மையோருக்கும் தமது மொழியில் கல்விகற்கும், அரசுடன் கருமமாற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

6. ஒரு சோஷலிச நாடாக இருக்கப்போகும் தமிழீழத்தில் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் நிலை விலக்கப்பட்டும், உழைப்பின் பெருமை உறுதிப்படுத்தப்பட்டும், சட்டத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு தனியார் துறை இயங்க அனுமதிக்கப்படும். அதேநேரத்தில் உற்பத்திச் சாதனங்களும் அவற்றின் விநியோக வழிகளும், அரச கட்டுப்பாட்டுக்கும் உடைமைக்கும் உட்படுத்தப்பட்டும் சோஷலிச திட்டமிடுதலின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டும், தனி மனிதனோ, தனி ஒரு குடும்பமோ சேர்த்து வைக்கக்கூடிய செல்வத்திற்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டும் இருக்கும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும், விடுதலையையும் வென்றெடுப்பதற்கான ஓர் செயல் திட்டத்தைத் தயாரித்துத் திருகோணமலையில் ஜவூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் சமர்ப்பிக்குமாறும், போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்குமாறும் இம் மாநாடு தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவைப் பணிக் கிறது.

மேலும் சுதந்திரத்திற்கான புனிதப் போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோஷலிச தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும் வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ் தேசிய இனத்திற்குப் பொதுவாகவும், தமிழ் இளைஞர்க்குச் சிறப்பாகவும் இம் மாநாடு அறைகூவல் விடுக்கின்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பகுதிகளை மேலே தந்துள்ளேன். இத்தீர்மானம் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்ட வரலாற்றுச் சூழலையும், சிங்கள ஏகாதிபத்திய நடைமுறைகளையும் எடுத்துக்கூறித், தமிழ்ஈழ அரசு எவ்வாறு அமையும் என்பதையும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் விபரிக்கின்றது.

## வழக்குரை

1976 மே 22-ஆம் நாள், சிங்கள அரசு குடியரசு பெற்ற நினைவு நாளைக் கொண்டாடியது. அந்நாளில் தமிழ்த் தலைவர்கள், மீண்ட இறைமையைப் பயன்படுத்தும் ஆட்சியுரிமையைப் பெறுவதற்குரிய வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வாசகத்தை அச்சிட்டுத் தமிழ் ஈழமெங்கும் மக்களுக்கு விநியோகித்தார்கள்.

யாழ்ப்பாண நகரில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மக்களுக்குக் கூறியதற்காக, மக்களைச் சிங்கள அரசுக்கு எதிராகத் தூண்டியதற்காக, இத்தீர்மானப் பிரதிகளை விநியோகித்த பலருள், நால்வர் அரசினால் கைது செய்யப்பட்டார்கள். அ.அமிர்தலிங்கம், வ.ந.நவரத்தினம், .க.பொ.இரத்தினம், க.துரைரத்தினம் ஆகிய நால்வரும் பத்து நாட்கள் காவலில் வைக்கப் பட்டார்கள்.

"இராஜத்துரோகம்" செய்ததாகக் குற்றம் சாட்டி அரசு இவர்கள் மீது கொழும்பில், மூன்று நதிபதிகள் அடங்கிய மேல் நீதிமன்றம் முன்பு 1976 ஜவூன் 18ஆம் நாள வழக்குத் தொடர்ந்தது.

நீதிமன்றத்திலும், அரசியல் வாழ்விலும் வேறு எல்லாத்துறைகளிலும், எனது தலைவரான மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் தலைமையில், குற்றம் சாட்டப்பட்ட வர்கட்காக நானும் நீதிமன்றத்தில் வாதாடினேன்.

வழக்குரை வாதமாக நான் கூறிய கருத்துக்களைச் சாதாரணத் தமிழ் மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இந்த நூலாகத் தந்துள்ளேன்.

ஈழத்தில் வாழ்கின்ற தமிழர் ஒவ்வொருவரும், தமிழ் இளைஞர் ஒவ்வொருவரும், தமிழ் மாணவர் ஒவ்வொருவரும், தமிழ் குழந்தை ஒவ்வொன்றும் இந்தக் கருத்துக் களை அறிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் ஈழக் குடிமகனின் இறைமை மீளப்பட்டுள்ளது. இந்த இறைமையைப் பயன்படுத்தித் தமிழரின் உயர்ந்த அரசியல் நோக்கங்களை நிறைவு செய்து, தமிழ் ஈழத் தமிழர்கட்கும், உலகின் ஏனைய தமிழர்கட்கும், மனித சமுதாயத்திற்கும், மனிதனின நாகரீக வளற்சிக்கும் பயன்படக்கூடிய வகையில் ஆட்சி அமையக்கூடிய, ஆட்சியுரிமையைப் பெறுவது ஈழத்தில் உள்ள தமிழர் ஒவ்வொருவரின் புனித கடமையாகும்.

விடுதலை, தன்னுரிமை, இறைமை, தன்னாதிக்கம், ஆட்சியுரிமை என்பன உடைய மக்களாட்சிக் குடியரசைத் தமிழ் ஈழக் குடியரசை அமைத்து வாழவும், பேணவும், பாதுகாககவும், அதனால், தமிழ் மக்களும் உலகமும் நன்மையடைய வாழ்வதற்கும் உறுதி பு'ணுவோமாக. (முற்றும்)

# வான்மீது துப்பாக்கிப் பிரயோகம்; வழக்கு விசாரணை அநு. நீதிமன்றில்

(கொழும்பு)


அநுராதபுரம்,யாழ்ப்பாணம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழநத சம்பவம் தொடர்பாக சந்தேகத்திற்குரிய பொலிஸ உத்தியோகத்தர்கள் இரு வரை அப்பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ அத்தியட்ச கர் பொறுப்பில் வைத் திருபப தற்கு நீதிமன்றம் நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த அனுமதியை அநுராதபுரம் மஜிஸ்ரேட் நீதவான் வழங்கியுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அநுராத புரம் மஜிஸ்ரேட் நீதவான் முன்னிலையில் நேற்று முன்திணம் ஆஜா செய்த போதே நீதவான் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

இருவரும் கடமையில் ஈடுபட்டடுக் கொண்டிருந்த போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்த பொலிஸ் அத்தியட்சகர் நீதவானிடம் தொிவத்தார். இவ்விருவர் தொடர்பான வழக்கு விசாரணைகள் மீண்டும் எடுத்துக்கொள்ளும் வரை அவர்களை தமது பொறுப் பில் வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கவேண்டும் என்ற பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான் அத்துடன் வழக்கு விசாரணையை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச்சென்ற வான் ஒன்றின் மீது நாடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கோண்டாவில் வாசி ஒருவர் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-8)



அகல இலங்கை கரபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட கரபந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் யாழ். ப.நோ.கூ.ச. கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் (ஜே.பி.) மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் சங்கச் செயலாளர் மனோகரன் நிற்பதையும் படத்தில் காண்க.

(படம்:சுண்டுக்குளி நிருபர்)



அண்மையில் அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் முன்னாள் அதிபர் திருமதி கனகராஜா மற்றும் அதிபர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கல்வியங்காடு நிருபர்)

## விவாத அரங்கு -7

விடயம் : தனியார் கல்வி நிறுவனங்கள்
மாணவர்களின் கல்வியை
சீரபடுத்துகின்றனவா
சீரழிக்கின்றனவா

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

*அனுப்பவேண்டிய முகவரி :-*

விவாத அரங்கு,
வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# சொந்தம்

இந்த வீடு எனக்குச் சொந்தம் என்று சொல்கிறோம். அதற்காக துக்கி வைத்துக் கொண்டா போகிறோம்? அது முடியாத காரியம். நாம் 'சொந்தம்'என்று நினைக் கும பல விஷயங்கள் நமக்குச் சொந்தமில்லை சார்.

எட்டு இலட்சம் ரூபா செலவு செய்து வீடுகட்டியிருப் பீர்கள்... பணம் உங்களுடையது என்பதற்காக அதில் பல் லியும், எட்டுக்கால் பூச்சியும் வாழாமல் போய் விடுமா? அவை அது தனது வீடு என்று நினைத்துக்கொண் டிருககும் 'இவர் பத்து லட்சம் ரூபா சொத்திற்கு அதிபதி' என்றார் ஒருவர். சொத்து எங்கே என்று கேட்டால் ''நீதி மன்றில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது'' என்கிறார். ''எது சொந்தம்?'' இது தான் கேள்வி. இந்தக் கேள்விக்கு ஞானிகள் என்ன பதில் சொல்கின்றனர்? அதை இப் போது பார்ப்போம்.

இல்லாத பரமஞானி அவர். இன்று ஒரு ஊரில் இருப்பார் நாளைக்கு ஒரு ஊரில் இருப்பார். ஒரு வேளை தான் சாப்பிடுவார் அதுவும் உப்பில்லாத சாப்பாடு. பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காது. பொய் சொல்வோரின் வீட்டில் சாப்பிடவே மாட்டார்.

ஒரு நாள் அவர் ஒரு ஊருக்குப்போனார். இந்த ஊரில் உண்மையானவர் யார் என்று கேட்டார். அதோ ஒரு மாடி வீடு தெரிகிறதே அந்த வீட்டில் ஒரு பண்ணையார் இருக் கிறார். அவர் மிகவும் உண்மையானவர்,நேர்மையானவர், அடியார்கள்மீது பக்தி கொண்டவர்,ஒரு இலட்சம் செல்வ முள்ளவர் நான்கு பிள்ளைகள் அவருக்கு என்று சொன் னார்கள்.

உடனே இந்த முனிவர் அந்தப் பண்ணையார் வீட் டுக்குப்போனார். இவரைப்பார்த்த பண்ணையார் எழுந்து ஓடி வந்து முனிவரின் காலில் விழுந்தார்.'' தயவு செய்து தாங்கள் எனது வீட்டில் சாப்பிட வேண்டும்'' என்றார். அவ ரது அடக்கம், அன்பு, பணிவு இதெல்லாம் முனி வருக்கு பிடித்துவிட்டது. இருந்தாலும் அவர் உண்மையான வர் தானா என்பதை சோதித்துப்பார்த்துவிட்டுத்தான் அவ ரது வீட்டில் சாப்பிடுவது என்று முடிவு செய்தார்.

''ஐயா உங்களுக்கு எவ்வளவு செல்வம் உண்டு'' என்று கேட்டார். 'சுவாமி என்னிடம் 22ஆயிரம் ரூபா உண்டு' என்றார் அவர். 'குழந்தைகள் எத்தைபேர்' என்றார் முனி வர். ''சுவாமி எனக்கு ஒரே மகன் தான் '' என்றார் . ''உமது வயது என்ன?'' என்றார் முனிவர். 'சுவாமி! எனது வயது மூன்று வருடம் ஐந்து மாதம் ஏழு நாள் பதினாறரை மணி' என்றார். முனிவருக்கு கோபம் வந்து விட்டது. ''நீர் கூறு வது முழுவதும் பொய்யாக இருக்கிறது. உமது வீட்டில் சாப்பிட்டால் எனது தவமே அழிந்து விடும் என்று கூறி விட்டுப்புறப்பட்டார்.

பண்ணையார் பதறிப்போய் அவரது காலில் விழுந் தார். 'சுவாமி! எனக்குப் பொய் பேசத்தெரியாது. நான் சொல்வதெல்லாம் உண்மைதான் என்றார். வரவு செல வுப் புத்தகத்தை எடுத்துக்காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு இலட்சம் ரூபா என்று இருந்தது. ''22 ரூபா என்று பொய் சொன்னாயே என்றார் முனிவர். ''சுவாமி ஒரு இலட்சம் ரூபா பெட்டியில் இருக்கிறது. இதோ பாருங்கள் 22 ஆயிரம் ரூபா தர்மம் செய்திருக்கிறேன். தர்மம் செய்த பணம் தானே எனக்குச் சொந்தம். பெட்டியில் இருப்பது எப்படி எனக்குச் சொந்தமாகும்''? என்றார்.

முனிவருக்கு ஆச்சரியம்! சரி! உமக்கு நான்கு பிள்ளை கள் இருபபதாக கேள்விப்பட்டேனே! என்றார். எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர் தான் ஆனால் என் பிள்ளை ஒருவன தான் என்றார். 'அது எப்படி?'என்று கேட்டார் முனிவர். ''மகனே நடராஜா என்று கூப்பிட்டார்'' சீட்டு விளை யாடிக்கொண்டிருக்கிறேன் வரமுடியாது என்றான் நடராஜன். 'மகனே வேல்சாமி என்று கூப்பிட்டார் 'ஏன் இப் படிக் கூச்சல் போடுகிறாய் போசாமால் இரு' என்றான் வேல்சாமி. 'மகனே சிவசாமி 'என்று கூப்பிட்டார், 'உனக்கு புத்தி இருக்கிறதா? ஏன் இப்படி அலறுகிறாய்? இந்த பூமிக்கு ஏன் சுமையாக இருக்கிறாய்' என்றான் சிவசாமி. 'மகனே கந்தசாமி' என்று கூப்பிட்டார் பண்ணையார்.

கந்தசாமி உடனே ஓடி வந்து கைகட்டி நின்றான் ''என்னப்பா வேண்டும்'' என்று கேட்டான. 'சுவாமி இவன் ஒருவன் தான் என் பிள்ளை' என்றார். 'சரி வயது விச யம் எப்படி?' என்றார் முனிவர். 'சுவாமி ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரம் தான் வழிபாடு செய்கிறேன். மற்ற நேரம் இந்த உடம்புக்காக உழைக்கிறேன். அடியே னுக்கு இந்த உடல் பிறந்து 60 வருடம் ஆகிறது ஆனா லும் 5வயதில் இருந்து வழிபாடு செய்த நேரம் தான் எனக்குச் சொந்தம். அதைத்தான் கூட்டிச் சொன்னேன் என்றார். முனிவர் மிகவும் மகிழ்ந்து அவர் வீட்டில் சாப் பிடடார். இது ஒரு பெரியவர் சொன்ன கதை இதிலிருந்து நமக்கு எது சொந்தம் என்று விளங்குகின்றதல்லவா?

இந்தத் தகவலை உங்களிடம் கூற முன்பு என் சினே கிதரிடம் கூறினேன். அவருக்கு 50 வயது. கூறிவிட்டு உங் கள் வயது என்ன என்றேன். அதற்கு அவர் ''இப்போது தான் நான் பிறந்திருக்கிறேன்' என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் ரோகித்த தெரிவிப்பு

(கொழும்பு)

இரு தசாப்தகாலமாக நிலவிரும் வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவி வழங்குவதற்காக தென்பகுதியின் அரசியல் கட்சி கள்



ஒன்றிணைய வேண் டும் என்று கடந்த வியாழக்கிழமை கட்சிதாவிய அமைச்சர் ரோகித்த போகொல்லாகம தெரிவித்துள் ளார்.

அரசாங்கத்தரப்பின் ஆசனத் தில் அமர்ந்த அமைச்சர் சபா நாயகரின் அனுமதியுடன் நேற்று பாராளுமன்றத்தில் உரை யாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள சமாதான நடவடிக் கைகளுக்கு ஆதரவு வழங்குவதற்காகவே ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்தேன். ஜனாதிபதி அண்மையில் ஆரம்பித் துள்ள சமாதானத்துக்கும்,நல்லிணக்கத்திற்கு மான தேசிய ஆலோசனை பேரவையில் தென் பகுதி யின சகல அரசியல் கட்சிகளும் இணைந்து தமது கருத்துக்களை தெரிவிக்கவேண்டும். விடு தலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதி கார சபை யோசனை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பதாக தேசிய ஆலோசனைப் பேரவையில் இதுகுறித்து இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித் தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத் திலும் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை பொறுப் பேற்ற காலத்திலும் அவர்களது நிலைப் பாட்டுக்கு ஆதரவு வழங்கிச் செயற்படவேண்டும் என்ற கொள் கையிலேயே தாம் இருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு அதிகளவி லான உதவிகள் தேவைப்படுவதாகவும், நாட்டின் எல்லைப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தென் பகுதி அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்துகொண்டே ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்திருந்த அமைச்சர் போகொல் லாகம மேலும் தெரிவித்தார்.

(ச-4)

# அரசின் வரவுசெலவுத் திட்டம் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

## எதிர்க்கட்சித்தலைவர் ரணில் கருத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமர்ப் பித்துள்ள வரவு செலவுத்திட்டம் அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற் றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரை யாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் பணவீக்கத்தை பாரிய அளவில் அதிகரிக்கப் போகின்றதா அரசாங்க ஊழியர்களின் ஒரு நாள் சேவை நேரத்தை 9 மணித்தியாலங்களாக உயர்த்தியுள்ளமை சர்வதேசத்தாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க சேவைக்கொள்கையில் ஊறு விளைவிப்பதாக அமைந்துள்ளது.

இது அரச ஊழியர்களின் உரிமைகளைப் பாதிக்கும்செயலாகும். இந்த யோசனைக்கு எதிராக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஊழி யாகளின் எட்டுமணிநேர கடமையை உறுதிப்படுத் தவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வரவு செலவுத்திட்டம் தொடர் பில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப்பேச் சாளர் பேராசரியர் ஜீ.எல். பீரிஸ் கருத்துத்தெரி விக்கையில்,அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத்திட்டம் வாழ்க்கைச் செலவுப்புள்ளியை வானளவிற்கு உயர்த்தப்போகின்றது. இவ்வரவு செலவுததிட்டம் குறுகிய நோக்கத்தைக் கொண்ட தாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை ஐக்கிய தேசி யக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## இராசிபலன்

**21.11.2004**
**(கார்த்திகை 06 ஞாயிற்றுக்கிழமை)**
**தசமி முன்னிரவு 9.35 மணிவரை**
**பூரட்டாதி பிற்பகல் 5.10 மணிவரை**
**இராகுகாலம் -4.47- 6.14 மணிவரை**
**சுபநேரம் -9.45-11.12 மணிவரை**
**சித்தாமிர்த யோகம்**

- **மேடம்** கடின முயற்சி, உற்சாகம், நல்ல செய்தி, சுபநிகழ்வு
- **இடபம்** சான்றோர் மதிப்பு, உடலுழைப்பு, வீண்பயம், அச்சமான நிலை.
- **மிதுனம்** வீண்தொல்லை, போசன நன்மை, உடல்நலக்குறைவு, வாகன பயம்.
- **கடகம்** திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பண வருவாய், தெய்வ தரிசனம்.
- **சிங்கம்** சுகவாழ்வு, சத்துருஜெயம், காரிய சித்தி, பெருமையடைதல்.
- **கன்னி** காரிய இடையூறு மனச்சஞ்சலம், தாழ்ந்த சுபாவம், வியாபார விருத்தி.
- **துலாம்** கல்வி மேன்மை, அற்பர் . உறவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.
- **விருச்சிகம்** கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம்.
- **தனுசு** கெளரவக்குறைவு, தனவிரயம், கடின வார்த்தை, காரிய தாமதம்.
- **மகரம்** தெய்வ சிந்தை, நல்லமுயற்சி, சயன சுகம், நண்பர் உதவி.
- **கும்பம்** பிதாசிந்தை, கோபப்படுதல், பண விரயம், பிரயாணம்.
- **மீனம்** தெய்வ தரிசினம், தொழில் சிந்தை, புகழ், நண்பர்கள் சந்திப்பு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வள்ளுவன்

### அரியாலையில் உள்ள வீதிகளில்

# மின்விளக்குகளைப் பொருத்துவதற்கு யாழ்.மாநகர ஆணையாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பிரதேசத்தில் அடிக்கடி இடம் பெற்றுவரும் திருட்டுக்களைத் தவிர்க்க உத வும பொருட்டு வீதிகளுக்கு மின்குமிழ்களை அமைத்துத் தரும் படி அரியாலை அபிவிருத் திச்சங்கம்யாழ்ப்பாணம்மாநகர சபை ஆணை யாளரிடம் வேண் டுகோள் விடுத்துள்ளது.



அரியாலை அபிவிருத் திச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரீ. பத்மநாதன் தலை மையில் மாநகர சபை யின் ஆணையாளர் கலாநிதி க. குணராஜாவை ஐந்து பேர் கொண்ட குழுவினர் சந்தித்தபோதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அததுடன், அரியாலைப்பகுதியில் சேதம டைந்த நிலையில் இருக்கும் வீதிகளைப் புனர மைத்தல்,சந்தைகள் அபிவிருத்தி, வைத்திய சிகிச்சை நிலையம் புனரமைப்பு,குழாய் வடிகால் அமைப்புத்திட்டம், வீதி விபத்துக்களைத தடுத் தல் போன்ற விடயங்கள் குறித்து ஆணையாளரி டம் விரிவாக எடுத்துக்கூறப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

அரியாலை அபிவிருத்திச்சங்கத்தின் கோரிக் கைகளை நிறைவேற்றி வைப்பதற்கு உரிய முயற்சிகள் எடுககப்படும் என ஆணையாளர் உறுதி யளித்திருந்தார் என அறியப்படுகின்றது.(ப-16)

வினை பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும் - குறள்

# வலம்புரி

## வல்வெட்டித்துறை சம்பவம் நீதி விசாரணை வேண்டும்

யாழ். குடாநாட்டில் மீண்டும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பாவி இளைஞர்கள் இருவர் பலியாகினர்.

பகல் வேளையில் எல்லோரும் பார்த்திருக்கக் கூடிய நிலையில் இனந்தெரியாத இருவர், விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவது என்பது ஓர் சாதாரணமான விடயம் அல்ல.

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, அதனை நடைமுறைப்படுத்திவருகின்ற வேளையில், வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவம் யாரால்? ஏன்? எதற்காக? நடந்தது என்ற கேள்விகள் விடை தெரியாத புதிராகவே உள்ளன.

சமாதான சூழ்நிலையில் - மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது யாழ். குடாநாட்டு மக்களின் இருப்பை - நடமாட்டத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இத்தகைய கொலைச் சம்பவங்கள் எதனை இந்த மண்ணில் ஏற்படுத்தப்போகின்றது - சமாதானத்தையா அல்லது மீண்டும் ஒரு யுத்தத்தையா என்பது ஆராயப்படவேண்டிய விடயம்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பிறந்த இடம் வல்வெட்டித்துறை. எதிர்வரும் 26 ஆம் திகதி அவரின் ஐம்பதாவது அகவை. பிறந்தநாளைக் கொண்டாடுவதில் வல்வெட்டித்துறை மக்கள் பேராவலோடு காத்திருக்கின்றனர். அதற்காக வல்வெட்டித்துறை விழாக்கோலம் பூண்டிருந்தது.

பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்தநாளை கொண்டாடுவதற்கு ஏழு நாட்களே இருக்கின்றன என்ற காத்திருப்பில் இருந்த மக்களுக்கு ஓர் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்வாக, இக்கொலைச் சம்பவம் நடந்துள்ளது.

யுத்தகாலத்தில் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்த வல்வெட்டித்துறை மக்களுக்கு நேற்று முன்தினம் நடந்த கொலைச் சம்பவமானது பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

அது மட்டுமன்று, இக் கொலைச் சம்பவத்தின் எதிரொலியாக யாழ். குடாநாடு பூராகவும் நேற்றைய தினம் ஸ்தம்பிதம் அடைந்ததோடு, ஒரு யுத்தப் பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

சமாதான சூழ்நிலையில் - தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கையில் இருக்கின்ற போது இனந்தெரியாதவர்கள் நடத்துகின்ற படுகொலைகள் சமாதானத்தை குலைப்பதாகவே அமையும்.

இராணுவப் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் யாழ்ப்பாணம் இருப்பதாக பெருமை பேசிக் கொள்ளும் இலங்கை அரசு இத்தகைய கொலைச் சம்பவங்கள் குறித்து நடுநிலை தன்மையோடு விசாரணை நடத்த முன்வரவேண்டும்.

கொலைச் சம்பவங்கள் நடைபெற்றவுடன் விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற பட்டாங்கை விடுத்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துவதன் மூலம் உண்மை தன்மையை வெளிப்படுத்த அரசு முன்வரவேண்டும்.

பத்தோடு பதினொன்று என்ற வழமையை விடுத்து வல்வெட்டித்துறைச் சம்பவத்தில் ஓர் நீதியான விசாரணையை - விரைவாக நடத்த யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச பொது அமைப்புக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் நடந்த இக் கொலைச் சம்பவத்திற்கு பொறுப்பு கூறும் பொறுப்பில் இருந்து இராணுவம் எவ் வகையிலும் விலகக் கூடாது. விலகவும் முடியாது.

# சமாதான நடவடிக்கைகளுக்கான ஏற்பாட்டாளராக நோர்வே மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது

## அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் நேரடியாகச் செயற்படும் விடயத்தில் நோர்வே அரசு பயனுள்ள பங்களிப்பை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் அமைச்சர் ஆற்றிய விசேட உரையின்போதே இவ்வாறு கூறியுள்ளார்:

அவர் மேலும் அங்கு கூறுகையில், இலங்கை கடந்த இரு தசாப்தகாலமாக இடம் பெற்றுவரும் இனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வுகாணும் பொருட்டு, இலங்கை அரசாங்கத்திற்கு நோர்வே அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகள் குறித்து அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சிடம் ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு பலவருடங்களுக்கு முன்பிருந்தே நோர்வே அரசாங்கத்தை ஏற்பாட்டாளராகச் செயற்படும்படி பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு ஏற்பாட்டாளராக பல நாடுகள் முன்வந்த போதிலும் அவற்றில் நோர்வே அரசாங்கத்தையே நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் அடிப்படையில் சமாதான நடவடிக்கைகளுக்கான ஏற்பாட்டாளராக நோர்வே அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டது.

ஆனால் நோர்வே அரசு மத்தியஸ்தராகவோ அல்லது நியாதிக்க சபையாகவோ செயற்படாமல், ஏற்பாட்டாளராக மட்டுமே செயற்படுமென்பதை நோர்வே அரசாங்கம் தெளிவாக ஏற்றுக்கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.(ரு-8)

## சரத் அம்பேபிட்டியவின் கொலைக்கு பிரதம நீதியரசர் கடும் கண்டனம்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேயபிட்டிய படுகொலை செய்யப்பட்டமையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியுள்ளார்.

கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்ற சமயம் செய்தியாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நீதித்துறை வரலாற்றில் இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பது இதுவே முதற்தடவையாகும். இத்தகைய சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கதும், கவலைக்குரியதுமாகும். இவர் பல சவால்களுக்கும் மத்தியில் துணிச்சலுடன் தனது கடமைகளை ஆற்றி வந்தவர்.

அவரது பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வது குறித்து அடிக்கடி நான் வினவிவந்துள்ளேன். பல்வேறு வழக்குகளில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் தீர்வு வழங்கிய இவருக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமை நீதித்துறைக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.(ரு-8)

## பாகிஸ்தான் பிரதமர் இன்று இலங்கை வருகிறார்!

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் செளகாத் அஸிஸ் இன்று இலங்கை வரவுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமருடன் அந்நாட்டு உயர்மட்டக் குழுவினரும் இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் பாகிஸ்தான் உயர்மட்டக் குழுவில் அந்நாட்டின் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் உட்பட சிரேஷ்ட அமைச்சர் மூவரும், செனற்சபை உறுப்பினர்கள் மூவரும், 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

பாகிஸ்தான் பிரதமர் தலைமையில் இலங்கை வரும் இக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (க)

### இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில்

## கைதான இராணுவ கப்டன் நீதிமன்றால் பிணையில் விடுதலை

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவ கப்ரன் ஒருவரை 50 இலட்சம் ரூபா பெறுமதியான உறுதிப் பிணையிலும், 25ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் விடுதலை செய்வதற்கு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன்,இவர் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

49 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதற்கான தகவல்களை வழங்க மறுத்தமைக்காகவே மேற்படி சந்தேகநபரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்ததாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க நீதிமன்றில் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண இராணுவ படைத்தளத்தில் கடமையாற்றி வந்த இந்தச் சந்தேகநபர் ஊனமுற்ற இராணுவ வீரர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவராவார். (ரு-8)

## சிறைச்சாலைத் திணைக்களத்தில் 1000 பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுவதாக நிதியமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் முதல் சிறைக்கூட பணியாளர்கள் வரை சகல தரத்திலும் இவ் வெற்றிடங்கள் நிலவுகின்றன. 1987 ஆம் ஆண்டிலிருந்து சிறைச்சாலை ஆளணிக் கோப்பில் எந்தமாற்றமும், எந்த அரசினாலும், மேற்கொள்ளப்படவில்லையெனவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 16 வருடகாலத்தில் ஐந்து புதிய சிறைச்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.ஆனால் எந்த அரசாங்கமும் புதிய ஊழியர்களை உள்ளீக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் சிறைச்சாலைத் திணைக்களம் பல பிரச்சினைகளையும், அசெளகரியங்களையும் எதிர்நோக்க நேரிட்டது.

இதேசமயம் இந்த ஆயிரம் வெற்றிடங்களையும் நிரப்ப எதிர்வரும் வரவு -செலவுத்திட்ட விவாதத்தின் போது பிரேரிக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## தேசியத் தலைவருக்கு வாழ்த்துக் கேடயம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது பிறந்த நாளை முன்னிட்டு யாழ் மாவட்ட மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தலைவருக்கு வாழ்த்துக் கேடயம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி கிளிநொச்சி மகளிர் பொறுப்பாளர்கள் ஊடாக தேசியத் தலைவர் இந்தக் கேடயம் கையளிக்கப்படவுள்ளது.தலைவருக்கு வழங்கப் படும் இக்கேடயத்தில் "பெண்ணினத்தின் வல்லமையின் வரலாற்றை எழுதிய தலைவா- நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம் நாம்'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. (ரு-4)

### வட- கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட

## முஸ்லிம்களின் இழப்பு குறித்த நூல் கொழும்பில் வெளியீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் இழப்புகள் சம்பந்தமான முழுமையான விபரங்களை உள்ளடக்கிய அறிக்கைகள் அடங்கிய நூல் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் காணி மற்றும் சொத்துக்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட பூரணத்துவமான அறிக்கையாக அமைந்துள்ள இந்த நூல்களை மூத்த அரசியல் அறிஞர் எம்.ஜ.முஹைதீன் வெளியிட்டு வைத்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் வேண்டுதலின் பேரிலேயே இந்த அறிக்கை நூலின் தயாரிப்பு இடம்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மனித உரிமை ஆர்வலர் குமார்ரூப சிங்க உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் இந்த இழப்புகள் சம்பந்தமான நூலினை நோர்வே தரப்பின் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம்காங்கிரஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (ரு-8)

ஓம் **தினசரி தியானம்**

## விவேகச் சிந்தனைகள்

இந்க் கண்ணாயைப் பார்க்கிறீர்கள் இது வெறும் தோற்றம் என்பது உங்களுக்குத் தெரியும் அது வெறும் ஒளியும் அதிர்வும் என்று கூறுகிறார்கள். சில விஞ்ஞானிகள்... அது தான் ஒரே உண்மையான நிலை. ஒரே உண்மையான உணர்ச்சி உண்மையான காட்சி.

சுவாமி விவேகானந்தர்

# நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைக்கவேண்டும்

## நோர்வேத் தூதுவர் ஜான் பிறட்ஸ்கர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் என்ற சொல்லை மக்கள் வார்த்தையாகவேனும் உச்சரிக்காதிருக்க வேண்டுமானால் சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆர்வம் முன்னைவிட தற்போது மக்களிடையே அதிகரித்துள்ளதாகவும் நோர்வேத் தூதுவர் ஜான் பிறட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் அரச அதிகாரிகளை நேற்று முன்தினம் மாலை இவர் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின் ஊடகவியலாளருக்கு வழங்கும் செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

மக்களின் இவ் ஆர்வத்தினைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளும் அரசாங்கத்தினரும் தங்களுக்கிடையே உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான உடன்பாடுகளின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையினை துரிதமாக ஆரம்பிக்க வேண்டும்.

சமாதானத்தை ஏற்படுத்திவிட்டு சும்மா இருக்காமல் அபிவிருத்தியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு செய்வதாயின் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஒன்றாகவே முன்னெடுக்க வேண்டும்.

நாட்டின் மீது பற்றுள்ள அனைவரும் சமாதானத்தையை விரும்புகிறார்கள். அதனால் அவர்கள் ஒன்றிணைந்து சமாதானத்தை ஏற்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றார். (க-04)

## ஏ-9 போக்குவரத்து நேற்றுத் தடை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதிப் போக்குவரத்து நேற்றுத் தடைப்பட்டது. ஏ-9 வீதியில் நொச்சிமோட்டை இராணுவ முகாமுக்கு அண்மையாக செல்லும் மண் வீதி நேற்று முன்தினம் பெய்த கடும் மழையினால் கனரக வாகனங்கள் சேற்றில் புதையுண்டுள்ளதாலேயே போக்குவரத்து தடைப்பட்டது.

இதன் காரணமாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளுக்கு வரவிருந்த மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் போக்குவரத்து சேவை நடைபெறாமையினால் திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-8)

## எதிரியின் நோக்கங்களுக்கு...

வடிக்கைகளில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மக்கள் போராட்டத்தை ஆயுத முனையில் கட்டுப்படுத்தமுடியாது. அப்பாவி மக்கள் மீதான மிக மோசமான பதில் நடவடிக்கையினால் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட நேர்ந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது இயல்பானதே. ஆயுதம் அற்ற அப்பாவி மக்கள் மீது மீசாலைப் பகுதியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது மேலும் மோசமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் மக்கள் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பதால் மக்கள் போராட்டத்தை கட்டுப்படுத்த முடியாது. இது வரலாறு அறிந்த உண்மை. இந் நிலைமை கட்டுமீறும் சந்தர்ப்பத்தில் நாங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் அங்கு அமைதியை ஏற்படுத்த எல்லாமட்ட முயற்சிகளை எடுத்தோம்.

ஆனால் மக்களின் உணர்வுகள் மிக வும் கொந்தளிப்பான நிலையை அடைந்தது. எனினும் எமது அரசியல் பணியாளர்கள் மூலம் நாங்கள் மக்களை அமைதிப்படுத்த முயன்றோம். பாதிப்படைந்த எமது மக்களின் உணர்வுகளை நாங்கள் புரிந்து கொள்கிறோம். அதற்கு மதிப்பளிக்கிறோம் இன்று மாவீரர்தின எழுச்சிவாரம் ஆரம்பமாவதால் அதனைப் புனிதமாகவும் மரியாதையாகவும் அனுஷ்டிப்பதற்கு அமைதியைப் பேணி மாவீரர் நாளின் புனிதத்தை காத்து அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புரிமையுடன் பொது மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

இதேவேளை மேற்படி படுகொலையைக் வழமைபோலவே திரிபுபடுத்தி புலிகள் மீது குற்றம் சுமத்த எதிரிகள் தரப்பு முயன்றுள்ளது. இதில் காயப்பட்ட பொன்னுத்துரை தெய்வேந்திரம் மூலம் உண்மைக்குப் புறம்பான திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை எதிரிகள் பரப்பியுள்ளனர். மாவீரர் வாரம் அண்மித்த இக் காலப்பகுதியில் தலைவருடைய பிறந்த நாளை மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் நினைவு கூருவதற்கு முயற்சிகள் எடுத்துள்ள இச் சந்தர்ப்பத்தில் புலிகள் ஆகிய நாம். பூரணமான சுமுகநிலையை விரும்பி நிற்கின்ற இச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான சம்பவங்களிற்கு நாங்கள் எந்தவிதத்திலும் காரணமாக அமைய மாட்டோம். சம்பவத்தில் கொல்லப்பட்ட இளைஞர்கள் தேசிய அபிமானிகள் இக் கொலைக்கான நோக்கம் என்னவென்பது மக்களுக்கு தெரிந்த விடயம். இவ்வாறு இளம்பரிதி தெரிவித்தார். (த-04-51)


# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு - இராசதுரை (நோட்டர்)

### (T.R. ஹாட்வெயர் சென்ரர் - சித்தன்கேணி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசதுரை (தர்மகர்த்தா, சங்கானை சிலம்புப் புளியடி வைரவர் ஆலயம்) 18-11-2004 அன்று காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு திருநாமம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் காமாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் விமலாதேவி (தொல்புரம்), இராஜகுமாரி (லண்டன்), ஜெயந்தி (ஆசிரியை சிவநகர் உருத்திரபுரம்), மனோகரன் (லண்டன்) மனோகரி (கொழும்பு), சிவகுமார் (ரஞ்சன் - லண்டன்), மாவீரர் சுரேஸ் (கண்ணன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராமநாதன் (தொல்புரம்), பராபரன் (லண்டன்), கணேசதாசன (அதிபர் கிளி/உருத்திரபுரம் ம.வி), மேரி (லண்டன்), சிறீதரன் (கொழும்பு), வைதேகி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கபிரதன், பகிரதி, சிந்துஜா (லண்டன்), சினைத் (லண்டன்), தயாளன், துவாரகன், வைஷ்ணவி, சுரேஷ்கண்ணா, பிரணவன், சிந்துரா ஆகியோரின் பேரனும் செல்வரட்ணம், காலஞ்சென்ற குணரத்தினம், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா), சிவசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் திருஞானசம்பந்தமூர்த்தி (லண்டன்), சரஸ்வதி (லண்டன்), சுப்பிரமணியம் (கொழும்பு), பரமேஸ்வரி (கொழும்பு), நகுலேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ரவிச்சந்திரன் (லண்டன்), ராஜன் (லண்டன்), சௌந்தரராஜன், கௌரி, திருமால், சாந்தன், சூரி, யசோதா, வரதா, தேவகி, ஞானகி ஆகியோரின் பெரியப்பாவும் செல்வராணி, திலகராணி, ரத்தினசோதி, புஷ்பராணி, தவராணி, சந்திரன், சுரேஸ், யோகேஸ், ஞானேஸ், யமுனா, றூபன், சிவா, நந்தினி, ராம், பிரசாந், ஐங்கரன், சுதன், தர்சினி, கஜாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-11-2004 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல்லத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தன்கேணிச் சந்தி,
சித்தன்கேணி.

(9034)

தகவல்:
மகன் ரஞ்சன்


# கருணாவின் சகோதரியின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுக்காலை இனந்தெரியாதோரினால் வீடொன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினால் வீட்டில் இருந்தவர்களுக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் சகோதரி பேரின்பமலர் மனோகரதாஸ் வசித்த வீட்டின் மீதே இக் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இராமலிங்கம் விமலநாதன் (வயது 21), பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் (வயது 23) ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

## இலங்கையில்....

நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பிற்காக விசேட பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் செயல்படவேண்டும். (இ-8)

## வல்லையில்....

நபரே இத்தகவலை நேற்று நண்பகல் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு சென்ற 524 ஆவது பிரிகேட் இராணுவத்தைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரிகள் பிரஸ்தாப நபரான பொன்னுத்துரை தெய்வேந்திரத்தை வைத்தியசாலை விடுதியிலிருந்து வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதியின்றி அங்கிருந்து அவசர அவசரமாகக் கூட்டிச் சென்றதாக வைத்திய அதிகாரி க. மயிலேறும் பெருமாள் நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்தார். பிரஸ்தாப நபருக்கு இராணுவச் சீருடை அணிவித்தே அழைத்துச் சென்றதாக தெரியவருகிறது.

தற்போது இந்நபர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-121,101,8)

## மீசாலையில் நேற்று பெரும்...

### தென்மராட்சியில்

சம்பவத்தினால் ஆவேசமடைந்த மக்கள் கிளர்ந்தெழுந்து மீசாலை வீதிகள் சந்திகளில் கூடிநின்று தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தியதுடன் போக்குவரத்துச் சேவையை முடக்கும் வகையிலும் கடும் சினத்தினாலும் வீதிகள் சந்திகளில் டயர்களைப் போட்டு எரித்தனர்.

இதனால் ஏ-9 வீதிப் போக்குவரத்து நேற்று முற்றாகத் ஸ்தம்பித்தது. இவ் வீதி வழியாக வந்த இராணுவ வாகனங்கள் தடைகள் அகற்றி போக்குவரத்தை மேற்கொள்ள முற்பட்டதனால் இராணுவத்தினருக்கும் பொதுமக்களிற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு முறுகல்நிலை உருவாகி களேபரம் வெடித்தது.

இதன்போது இராணுவத்தினர் பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொடிகாமத்தைச் சேர்ந்த சுந்தரராஜா (வயது 24) என்ற இளைஞன் மிகவும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவத்தினால் ஆவேசமடைந்த பொதுமக்கள் இராணுவத்தினர் மீது சீன வெடிகளைப் போட்டு வெடிக்க வைத்ததுடன் கற்களாலும் வீசித் தாக்கினர். இதனால் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

பெருமளவில் திரண்டிருந்த பொதுமக்களின் ஆக்ரோசமான எதிர்ப்பினால் படையினர் மீசாலையிலிருந்து பின்வாங்கி கொடிகாமம்வரை சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இராணுவத்தினரின் மீசாலை புத்தூர்ச் சந்தி அப்பக்கடை மற்றும் இராணுவக் காவலரண் வேலிகள் என்பன மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. நேற்று மாலைவரை அப்பகுதியில் தொடர்ந்து களேபரமும் பதற்றமும் தொடர்ந்து வண்ணம் இருந்தது.

பின்னர் மாலை தென்மராட்சி அரசியல் துறையினர் ஒலிபெருக்கி மூலம் மக்களை அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

### வடமராட்சி

வடமராட்சியின் முக்கிய நகரங்கள் சந்திகள் எங்கும் கடைகள் பூட்டப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டது. வீதிகள் எங்கும் டயர் போட்டு எரிக்கப்பட்டு போக்குவரத்து முடக்கப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்ற வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் திரண்ட பெரும்திரளான பொதுமக்கள் ஊர்வலமாக வல்வெட்டித்துறை வைத்தியசாலை வரை சென்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### வலிகாமம்

யாழ். நகரம் உட்பட வலிகாமம் பகுதி எங்கும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு இயல்புநிலை பாதிக்கப்பட்டு வீதிகள் போக்குவரத்து முடக்கப்பட்டு காணப்பட்டது. ஆங்காங்கே சில சில இடங்களில் இராணுவ வாகனங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் நேற்றைய தினம் ஹர்த்தால் மற்றும் கடும் எதிர்ப்பு நடவடிக்கையினால் குடாநாடே பெரும் பதற்றமடைந்து ஸ்தம்பித்து காணப்பட்டது. (இ-101,05,08,09,39,06,03,02,29,37,43,16)

## குடாநாட்டில்...

குழுவின் அனுசரணையுடன் யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றுமாலை 5 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அவசர சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்திப்பை நடத்துவது தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பற்றதெனக் கருதி யாழ். ஆயர் இல்லத்தில் சந்திப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் யாழ். குடாநாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சகல தரப்பினரும் முன்னெடுத்து அமைதியைப் பேணுவதற்கு முடிவு செய்யப்பட்டது. அத்துடன் படைத்தரப்பினரது முகாமுக்கு அருகில் மேற்படி கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதால் படைத் தரப்பினர் இச்சம்பவத்திற்குப் பொறுப்பேற்று, சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு கைதுசெய்து நீதியின் முன் நிறுத்தவேண்டும் என விடுதலை புலிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இச்சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதி, யாழ். ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் உட்பட படையதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குடாநாட்டின் வீதிப் போக்குவரத்துக்கள் முற்றாக முடக்கப்பட்டதால், இராணுவக் கட்டளைத்தளபதி உலங்குவானூர்தியில் சந்திப்பில் கலந்துகொள்ள வந்திருந்திருந்தார் என்பது குறிப்பித்தக்கது. (த)

## தமிழரைக்...

இதனால் சுமார் 10 நிமிடம் வரை பாராளுமன்ற நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டன. இதேவேளை இந்த நேரத்தில் தென்மராட்சியில் பொதுமக்கள் மீது இராணுவம் கண்மூடித்தனமான முறையில் தாக்குதல் நடத்தியமையை இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு சுட்டிக்காட்டியபோதும் இராணுவம் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மறுத்துவிட்டார்.(க)









இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபகத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.